காலாண்டிதழ்

# கதிரவன்

KATHIRAVAN

சித்திரை - ஆனி - 2012

கதிர் - 12




## மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் சிற்றிதழ்கள்



புலவர் மணி
பெரியதம்பிப்பிள்ளை

60/=

MEANING OF CREATION...

# AATHITHYA ஆதித்யா Digitals

## DIGITAL PRINTING

வெனர்கள்,
விளம்பரப்
பலகைகள்,
ஸ்ரிக்கர்கள்,
*Canvas Paper Printing, wide format photo printing.*



### மட்டு நகரில்

- துரிதமான வேலை
- துல்லியமான சேவை

**258/B, Trinco Road, Batticaloa.**
065 2223134/ 077 1988531
e-mail : aathithyadb@gmail.com

---

சகல வைபவங்களுக்குமான போட்டோ, வீடியோ சேவை



# ANNAI PHOTO & VIDEO

**Sathees**

**professionals for Quality photograph & Videographers**

- நவீனத்துவம்
- உயர் தரம்
- விரைவான சேவை
- காத்திரமான வேலை

Voice : 077- 724 0533
011- 425 7605

"வாழும் தமிழ் வாழ்க"

கதிரவன்

வெளியீடு : கதிரவன் கலைக்கழகம்
பதிவு இல. : வகிமா/கஅ/பண்/மட்/21/2000
தோற்றம் : 28.04.1976 தாபகர் சி.தங்கராசா

# கதிரவன்

## கல்வி இலக்கிய கலைச் சஞ்சிகை

## சித்திரை - ஆனி (2012)

# கதிர் - 12

**பிரதம ஆசிரியர்**
திரு.த.இன்பராசா (கதிரவன்)

**கதிரவன் கலைக்கழக நிர்வாகம் (2012)**

திரு.த.தயாபரம்
திரு.ச.மதன்
திரு.சி புவனேந்திரன்
திரு.செள.லெ. லொறன்ஸோ
திரு.ந.பிறேமக்குமார்
திரு.த.கோபாலகிருஸ்ணன்
செல்வி.ந.சறோஜினி

கணனி வடிவமைப்பு : அ.ஜெயலக்ஷ்மி

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு.

திறமை என்பது சாதாரண விடயத்தை அசாதரண முறையில் செய்வதாகும்

## உள்ளே........

| | பக்கம் |
|---|---|
| ✧ **கதிரவன் பேசுகிறேன்** | 02 |
| ✧ **கவிக்கதிர்** | |
| ★ ஆரிடம் சொல்வது | 16 |
| ★ இவர்கள் என் பார்வையில் | 31 |
| ✧ **கட்டுரைக்கதிர்** | |
| ★ புலவர்மணி | 03 |
| ★ தொலையும் தொன்மைகள் | 08 |
| ★ ஓவியத்தில் நவீனம் | 21 |
| ★ கிழக்கிலங்கை.... | 27 |
| ★ யுனிக்கோட் தவறவிட்ட | 30 |
| ✧ **கதைக்கதிர்** | |
| ★ உயிர்களிடத்தில் அன்புவேண்டும் | 11 |
| ★ சாதனை | 13 |
| ✧ **நாடகக் கதிர்** | |
| ★ முன்பள்ளியின் முக்கியத்தவம் | 17 |
| ✧ **செய்திக்கதிர்** | 32 |
| ✧ **வாசகர் கதிர்** | 34 |
| ✧ **கல்விக் கதிர்** | 35 |
| ★ புலமைக் கதிர் | 37 |

**தொடர்பு முகவரி**
கதிரவன் கலைக்கழகம்
புதுக்குடியிருப்பு - EP
மட்டக்களப்பு - இலங்கை
0776968250, 0754265201
மின்னஞ்சல் : *Kathiravanmagazine@gmail.com*



அன்பின் அடிப்படை விசுவாசம்.

# கதிரவன் பேசுகிறேன்!



## இதைத்தவிர எதைச் செய்யமுடியும்?

அண்மைக்காலமாக எமது மண்ணில் புத்தக வெளியீடுகளும், சஞ்சிகை வரவுகளும் கலை இலக்கிய விழாக்களும் மிகச் சிறப்பாகவே நடைபெற்று வருகின்றன. தமிழ் மீது கொண்ட பற்றுதல் காரணமாகவும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்காகவும் எம்மிடம் உள்ள கலை, கலாசார இலக்கியங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும் ஒரு சிலர் இவற்றையெல்லாம் செயற்படுத்த, சிலர் விமர்சிப்பதையும் மட்டம் தட்டுவதையும் தொழிலாகக் கொண்டுள்ளனர். ஓரிருவர் ஊக்கமூட்டி உற்சாகப்படுத்துவதும் உண்மை. இது எமது சமூகத்தில் அன்று தொட்டு இன்றுவரையுள்ள நடைமுறை.

இன்றைய காலகட்டத்தில் புத்தகம் ஒன்றை வெளியிடுவது எவ்வளவு சிரமம் என்பது வெளியீட்டாளருக்கும், சிறந்த வாசகர்களுக்கும் புரியும். விலைவாசி அதிகரிப்பும் அதனால் ஏற்படும் குடும்பச் சுமையும் போட்டி நிறைந்த வாழ்க்கையாக பொழுதுகளை கழிக்க வேண்டிய இக்கட்டான காலத்தில் இலக்கியத் தாகம் கொண்டு எதிர் நீச்சல் போடவேண்டிய நிலை தற்காலத் தேவையுமாகும்.

இருந்தவையெல்லாம் நாளாந்தம் தொலைந்த வண்ணமே உள்ளது ஆனால் நாம் தொலைத்ததை விட பறிகொடுத்தது தான் அதிகம். எம்மிடம் இருந்து வலுக்கட்டாயமாக பறித்து எடுத்துவிட்டார்கள். எமது வரலாற்றை எமது பண்பாட்டை நாளாந்தம் இழந்து கொண்டிருக்கின்றோம். இத்தனை காலமும் நாம் இழந்தவை எண்ணிலடங்காதவை. அதிலும் கலை, கலாசார, இலக்கிய முதுசங்களை நாளாந்தம் இழக்கின்றோம்.

காலத்தின் மாற்றத்தால் இழந்தவைகளைவிட கட்டாயத்தின் பெயரில் இழந்தவைகளே அதிகம். இழப்புக்களை நிவர்த்திசெய்ய முடியாவிட்டாலும் இருப்பதைக்காப்பாற்ற தமிழ்மொழியையும், தமிழ் இனத்தையும் காப்பாற்ற எம்மிடமுள்ள தடயங்களையும் பண்பாடுகளையும் காப்பாற்ற மூடி மறைக்கப்பட்ட திட்டமிட்டுப் பறிக்கப்பட்ட வரலாறுகளைக் காப்பாற்ற நாம் இலக்கியங்களைப் படைக்க வேண்டும். கலை கலாசார நிகழ்வுகளை நடத்த வேண்டும். இல்லாது விட்டால் எமது மக்கள் வழிதவறி விடுவார்கள்.



சுவாமி விவேகானந்தரின் 150வது ஜனன தினத்தினை சிறப்பித்து "கதிரவன்" சிற்றிதழ் சுவாமி விவேகானந்தர் சிறப்பிதழாக மிகவிரைவில் வெளிவரவுள்ளது. தரமான ஆக்கங்களை மற்றும் வர்த்தக விளம்பரங்களை எதிர்பார்க்கின்றோம் **(ஆ-ர்)**



அறிவுபூர்வமான வாழ்க்கை பிரகாசிக்கும்.

கலாபூசணம் தேனூரான்

# புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை



மட்டக்களப்பு பிரதேசத்தின் புலவர் பரம்பரையில் விபுலானந்த அடிகளாரை அடுத்து தமிழ்ப் பேரறிஞராய் போற்றத்தக்கவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை. பண்டிதர்களும், புலவர்களுமாகப் பலர் இப்பிரதேசத்தை அழகு செய்த போதிலும் அச் சிறப்புப் பெயர்களால் குறிப்பிடப்படும் பெருஞ் சிறப்பினைத் தமக்கே ஆக்கிக் கொண்ட புகழானார்.

இந்து சமயப்பரம்பரையினராய்ப் பிறந்த ஒரு சைவப் பெரியாராகிய பண்டிதமணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மண்டூர் கந்தசுவாமி கோயிலின் வண்ணக்கராய் இருந்து 32 ஆண்டுகள் அதன் பணிகளைத் திறம்பட நடத்திய ஏகாம்பரப்பிள்ளை என்பவரின் மூத்த மகனாய் **"விளம்பி" வருடம் மார்கழி மாதம் 25ந் திகதி (18.12.1899)** பிறந்தார். குருகுலமுறைப்படி **தமிழ், இலக்கிய, இலக்கணம், நிகண்டு** என்பனவற்றைக் கற்றுக்கொண்டவர். **கந்தபுராணம், திருச்செந்தூர்புராணம், மகாபாரதம்** என்பன மூல பாடமாக அக்காலத்தில் இவருள்ளத்தை கலைவளஞ் செய்தன. அன்னாரது இளமைக்கால ஆசிரியராக வாய்த்தோர் மட்டக்களப்பை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட யாழ்ப்பாணத்து **புலோலியூர் சந்திர சேகரம்பிள்ளை** என்பவராவார் தன் அன்னையாரின் பிரிவு காரணமாகப் பெரியதம்பிப்பிள்ளையவர்களின் தமிழ்க் கல்வி இடையீடு பட்டமையினால் சில நாட்களின் பின்னர் ஆங்கிலம் படிப்பதற்காகக் கல்முனையில் உள்ள **"வெஸ்லி"** உயர்தரப்பாடசாலையில் சேர்க்கப் பட்டார். அங்கு சேர்ந்த இரண்டாண்டுகளிலேயே எட்டாவது வகுப்புவரை தேறிய திறமையாளர் இவர்.

அப்போதுதான் மண்டூர் கந்த சுவாமி கோயில் திருவிழாவுக்கென யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து செல்லும் தமிழன்பரும் ஒரு புத்தக வியாபாரியுமான மட்டுவில் **திரு.தம்பிமுத்துப்பிள்ளை** என்பவரின் தொடர்பு இவருக்குக் கிடைக்கலாயிற்று. அன்னார் தொடர்பால் ஆங்கிலக் கல்லூரியை விடுத்து, **யாழ்ப்பாணத்து நாவலர் சைவப் பிரகாசவித்தியாசாலைக்காவிய பாடசாலையில்** சேர்ந்து கலைத்

திறனுக்காக அளிக்கப்படும் கல்வி, நன்கொடை பெற்று **சுன்னை குமாரசுவாமிப் புலவரதும்** நாவலரது பெரிய தந்தையாரின் மகனாகிய **தமிழ்ப் பேரறிஞர் திரு.த.கைலாயபிள்ளை** அவர்களதும் அன்பின் மாணவனாகும் வாய்ப்பினையும், **பண்டித மகாலிங்க சிவம் பண்டித மயில்வாகனனார்** என்பவரை உசாத்துணைவராகப் பெறும் பேற்றினை யும் பெற்றார்.

அக்காலம் யாழ்ப்பாணம் **பண்டிதமணி கணபதிப்பிள்ளை** என்பாருடன் கல்வி பயின்று அவரது பெரும் நண்பனாகும் சிறப்பினையும் அடையலானார்.

இரண்டாண்டுகளில் மற்றைய மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டிருந்த தமிழ் வடமொழிகளில் இலக்கிய, இலக்கண பாடமனைத்தையும் பத்து மாதங்களிலேயே கற்றுத்தேறிச் செந்தமிழ் பரிபாலன சங்கத்தார் நடத்திய பரீட்சையில் விசேட சித்தி எய்தி அவர்களது பாராட்டும் பரிசும் பெற்றார்.

இச் சிறப்பினால் குமாரசுவாமிப் புலவருடைய நல்லன்பும் மதிப்பும் இவர் பால் அதிகமாயின. பண்டிதர் என்ற கலைச் சிறப்புப் பெயரால் நாடும் இவரைக் கொண்டாடுவதாயிற்று.

அக்காலத்திலேயே இவர் ஆக்கிய முதல் நூலாகிய **மண்டூர் பதிகம்** எழுந்தது. **1922ம்** ஆண்டு இந்நூல் வெளிவந்த போது இதன் பெருமையால் அறிஞர் பலருடைய நன்மதிப்பு இவருக்குக் கிடைக்கலாயிற்று. கிறிஸ்து மதக் கொள்கையிலே நல்ல பயிற்சியும் நம்பிக்கையுமுள்ள இவர் பின்னர், 1922ன் கடைசிப்பகுதியில் மதுரை சென்று **பசுமலை தேவசாத்திர உயர்தரக் கல்லூரியில்** ஈராண்டு கிறிஸ்துவ மதத் தத்துவங்களைப்பயின்றார். அதன் பேறாக **இலங்கை, இந்தியா, பர்மா, மலாயா** ஆகிய நாடுகளுக்கெல்லாம் பொதுவாக நடத்தப்பட்ட விவிலிய நூல் விளக்கப் பரீட்சை ஒன்றில் முதல்வராகத் தேறி விசேட பரிசையும் கிறிஸ்தவ மதத்தின் மதிப்பையும் ஒருங்கே பெற்றார். அந்த நாட்களிலே தான் ஐம்பது விருத்தங்களாலான **கிறிஸ்தவ சபைத் துயிலுணர்ச்சி** என்னும் இவரது நூல் மதுரையில் அரங்கேற்றம் பெற்றது.

இந்திய நாட்டு இசைச் செல்வமானது பழங்காலம் தொட்டுப் பெற்றிருந்த வலிமையை நன்கு காட்டி மேலைத்தேச இசைகளை விட்டு அந்தத் தமிழ் இசையை மீட்குமாறு கிறிஸ்தவ சபையோரை இச் செய்யுளிற் கேட்கிறார். இதனையொட்டி இவரால் **குருபரத்தரிசனத் திருவேட்கை** என்ற நூலும் பத்து விருத்தங்களாலாக்கப்பட்டது. கடவுட் தாகம் செறிந்த இவருள்ளச் சிறப்பை,

"தானான அன்பரும்பித் தருமம் பூத்துத்
தாவாத இனிமைதரும் பரமானந்த
தேனாறு பெருக்கெடுத்துக் கரை புரண்டே
திருவருளாந் தெள்ளமுதம் கொழித்து வீச
நானார்வ முடனள்ளியுண்ண வூட்டி
நரகமதை நீக்கி நித்திய சீவனீயும்
கோனாகும் ஒருசீவ விருட்சந் தன்னைக்
குருபரனைக் கண்டு கண்கள் குளிர்வ தென்றோ"

என்பது போன்று அந்நூற்



சமூக நீதி சமாதான வழியாகும்.

செய்யுள் தோறும் நன்கு காணலாம். இவற்றின் சிறப்பினால் தமிழகம் எங்கும் புலவர் புகழ் பரந்து சென்றது.

1928ல் காந்தியடிகள் இலங்கைக்கு வந்தார். திருகோணமலை மக்களின் சார்பாக பிள்ளையவர்களே அம்ம கானுக்கு வரவேற்புப் பத்திரம் படித்து அடியுறை செய்வதற்காக தெரிவு செய்யப் பட்டார். அனுராதபுரப் புகையிரத நிலை யத்தில் வைத்து அவர் படித்துக் கொடுத்த உபசாரப் பத்திரத்திலிருந்து ஒரு வெண்பா வினை அவரது கவித்துவப் புலமைக்கு எடுத்துக் காட்டாகக் குறிப் பிடலாம்.

**'தீண்டாமை நோயதனைத் தீர்க்கும் சஞ்சீவிபகை**
**வேண்டாமே சாத்விக போர் வேண்டினோன்- தூண்டாச்**
**சுடர் விளக்கம் போல் நின்று தோற்றினான் மண்மேல்**
**இடர் விளக்கமில்லையினி'**

அறப்போர், தீண்டாமை எதிர்ப்பு என்பவற்றையே காந்தியடிகளின் நல்லு ருவமாகக் காட்டி அன்னாரது உண்மை யால் உலக இடர் இல்லையாகும். என்றமைந்த கற்பனையானது இவ் வெண்பாவினை அழகு செய்தமை நயத்தக்கதாகும்.

1926ம் ஆண்டு தொடக்கம் நான்கு ஆண்டுகளாகத் திருகோணமலை யில் இருந்த காலத்தில் இவரிடம் தமிழ் பயின்ற மாணவர் பலராவர். புலவர்மணி யவர்கள் **சீவகன் சரித்திரத்தை பாலசரித நாடகம்** என்னும் நாடக நூலமைத்து வெளியிட்டகாலமிது.

இவர் மட்டக்களப்பு **சென்ற் அகஸ்தன்** ஆசிரிய கலாசாலையி லிருந்த ஒன்பது ஆண்டுகளிலும் கத்தோ லிக்கக் குருமார்கள் பலர் புலவர்மணி யிடம் தமிழறிந்து இன்புற்றனர். இவரிடத் திற் பயின்று நல்லாசிரியர்களாகியும் தமிழ்ப் பண்டிதர்களாகியும் இத் தமிழகத் தைப் அணி செய்து வெளியேறியோர் பலராவர். அக்காலத்தில் இவ்வறிஞர் ஏறாத இலக்கிய மேடையே இல்லை எனலாம்.

1943ல் கல்முனையில் நடைபெ ற்ற **அகில இலங்கை விளைவு விழாக் காட்சியிலே** இலங்கை முழுவதற்குமாக இரு பாடற் போட்டிகள் இடம் பெற்றிருந் தன. இவற்றில் **புதுமைக்கமக்காரன்** என்ற தமது இசைப்பாடல்களாலும் **கிருஷிக ஆத்திசூடி** என்ற தனிச் சூத்திரங்களாலும் புலவர்மணி அவர்களே முதற்பரிசுகளிரண்டையும் பெற்று அரசினரின் பெரும் மதிப்பையும் கவர்ந்து கொண்டனர்.

இவ்வாண்டிலே தனது மனைவி கொடிய நோய்வாய்ப்பட நேர்ந்த போது கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் அவரைச் சேர்த்து விட்டுக் கொழும்பிலேயே ஒரு மாத காலம் இவர் தங்கியிருக்க நேர்ந்தது. அக்காலத்தில் இவர் மனச் சாந்தி பெறும் பொருட்டுப் பகவத் கீதை என்னும் சங்கீத நூலைப் படித்து வந்தார். வடமொழிச் சுலோகங்களைப் படிக்கப் படிக்க அவை வெண்பாக்களாக அழகிய வடிவம் பெறலாயின. அவ்வாறு எழுந்த எழுநூறு வெண்பாக்களைக் கொண்ட **பகவத்கீதை வெண்பா** என்னும் சிறந்த

நூலைக் காலம் நமக்களித்து இவரது புலமையினைமேலும்மலைவிளக்காக்கியது.

வெண்பாக்களால் அமைந்த இவரது தனிச் செய்யுள் சிறப்பினோடு அவற்றின்சுவைநயத்தையும்கண்டுவியந்த அறிஞர் குழு ஒன்று இலங்கை வானொலிப் புத்திமண்டல நிகழ்ச்சியின் போது விபுலாநந்த அடிகள் தலைமையிற் கூடி வெண்பாவிற் பெரியதம்பி என்று புகழ் சூட்டி இவரைக் கௌரவப் படுத்துவதாயிற்று.

**"பொங்கொளி சேர் தீயைப் புகைப்போர் தெனப்பளிங்கை**
**மங்கப் புழுதி மறைந்த தெனத் தங்கும்**
**கருவைக் கருப்பை கவிந்த தெனக்**
**காமம் மருவில் புகை புதைக்கு மால்"**

என்னும் அழகிய உவமைகளாலமைந்த வெண்பாவும் ஆசையின் தொடர்பாற் கோபம் பிறத்தலை.

**உண்ணும் விடயத்தா லூண்டோமே பற்றுள்ளம்**
**பின்ன விருப்பம் பிறக்குங் காண் - துன்னும் மன**
**விருப்பம் சித்தி பெற வாய்த்திலதே லஃதாற்**
**சினமுறுதல் மாந்தர் செயல்.**

என்னும் இனிய சொற்கள் செறிந்த வெண்பாவும் நன்கு காட்டுகின்றன. இத்தகைய உயரிய நடையும் இனிய சுவையும் படைத்த பகவத்கீதை வெண்பா எட்டாண்டு கழிந்த பின் 1.12.1952இல் யாழ்ப்பாணத்து **ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்து** வெள்ளி விழாவின்போது பேரறிஞர் குழுவிடை நல்லரங்கேற்றம் பெற்றது. இந்நூற் பெருமையினை வியந்து அச்சங்கத்தர் அந்நாளில் **'பண்டிதமணி'** என்னும் பட்டமும் வழங்கி இவரைக் கௌரவம் செய்தனர்.

புலவர் மணியவர்கள் மூன்று ஆண்டுகளை நிலவளச் சேவையில் இடைக்காலத்தில் கழித்த பின்னர் 1947ல் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக அமர்ந்து 1952 தொடக்கம் மட்டக்களப்பு தமிழ்க் கலை மன்றத்தில் தமிழ்த் துறைப் புலவராய் அமர்ந்து மட்டக்களப்புப் பிரதேசத்தை அழகு செய்து வந்தனர். கிழக்கிலங்கையில் தமிழ் வளர்க்கும் இக்கலை மன்றம் வெளிநாட்டாருக்கு முன்னரே 1950ல் இவரது புலமையை மதித்து **புலவர்மணி** என்று புகழ் சூட்டியதன் மூலம் தனது மதிப்பையும் உயர்த்திக் கொண்டதெனலாம்.

தன் இளமைக் காலதிலேயே கல்விச் சிறப்பினால் **பண்டிதர்** என்ற சிறப்புப் பெயரை வித்துவான் சரவணமுத்தினால் முதலில் சூட்டப்பட்டிருந்தது. மட்டக்களப்பு தமிழ் இலக்கிய மன்றம் மட்டக்களப்பு சிவானந்த வாசிகசாலை என்பவற்றை அமைப்பதற்காக அவருடனும் விபுலானந்த அடிகளுடனும் பங்கு கொண்டுழைத்த இப்புலமையாளர் 1946ல் அடிகளார் நெருப்புக் காய்ச்சலால் வருந்திய போது அந்நோயினின்றும் நீங்கி இப்பிரதேசத்தை அழகு செய்வற்காக உடல் நலத்தை அவர் மீண்டும் பெறுதல் வேண்டும் என்று பெரிதும் விளைந்தார். அந்த மனவிளைவும் தமிழ டிகளிடத்துக் கொண்ட பேரன்பும் கனிந்து **மீட்சிப்பித்து** என்னும் தலைப்பிலமைந்த பத்து நெடிலடி விருத்தங்களாயெழுந்தன.



**மனவுறிதியே வெற்றிக்கு வழியாகும்.**

இப்பாடல்கள் மட்டக்களப்புத் தமிழ்க் கலை மன்றத்தின் முதலாவது மலராக 1951ல் வெளிவந்தன.

இலங்கைக் கலைக்கழகம் இலங்கைக் வானொலிக் கல்விப் பகுதி ஆலோசனை சபை கிழக்கிலங்கை சமாதான விசாரணைக் குழு, யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்து பரீட்சைக்குழு என்பவற்றின் உறுப்பினராகவும் அகில இலங்கை இந்துமாமன்றம் கிழக்கு மாகாணக் கூட்டுறவுச் சங்கப் பேரவை ஆகியவற்றின் உபதலைவராகவும் விளக்கினார்.

தண்டமிழோடு தாய் நாட்டினையும் மதித்து போற்றும் இவரது மனநிலை கனிந்து எழுந்த **'இலங்கை மணித் திருநாடு'** என்னும் இசைப் பாடலானது இலங்கையின் நிலவளம், கலைவளம், என்பன பொதியப் பெற்று எல்லோரையுங் கவர்ந்து படைத்த ஒன்றாகும்.

**'மகாவலி கங்கை எங்கள் வள நதியே - அருள்**
**மன்னு சிவ னொளிபாத மெங்கள் மலையே**
**பூவலம் சேர்கதிரை எங்கள் தலமே - இதைப்**
**போற்றிப் புகழ்ந்தால் வரும் பெருநலமே.[10]"**

என்பது இலங்கைக்கமைந்த ஒரு தமிழ்த் தேசிய கீதம் என்று பாராட்டத்தக்கவாறாய் மேற்கோளாகப் பல இடங்களி லும் எடுத்தாளப்பட்டுள்ள சிறப்புடையன.

"...............................................................

**மானமழிந் தெய்தவருள் வருமான மடையார்**
**அலகில் புகழாறுமுக நாவலனாங் கொடையார்**
**அவர் வாழும் யாழ்ப்பாணம் அனைவோர்க்**
**குமினிதே."**

என்று யாழ்ப்பாணத் திரு நாட்டையும்,

"...............................................................

**சுவாமி விபுலானந்தர் யாழிசை நூலொலிக்கும்**
**மஞ்சாரும் பொழில் மட்டு மாநாட்டில் நிலைக்கும்**
**வாழ்வுடையோர் க்கவர் மனம் போல்**
**மனவளமும் இனிதே".[11]**

என்று மட்டக்களப்பு தமிழகத்தையும் பற்றி இவர் பாடியுள்ள தனிச் செய்யுள்கள் இரு நாட்டினிடத்தும் வேற்றுமையின்றி இவர் கொண்டுள்ள பேரன்பினைப் புலப்படுத்துவன. இவ்வாறு புலவர் மணி அவர்கள் செய்த தனிப்பாடல்கள் ஏறக்குறைய 2500க்கு மேல் உளவாகும்.

இத்தகைய தமிழ் பேறறிஞர் மட்டக்களப்பின் கடந்த காலப் புலவர் பரம்பரையின் வழித் தோன்றலாகவும், நிகழ்காலக் கவிஞர் குலத்தின் பேரெல்லையாளராகவும் வருங்காலக் கவிஞர்களுடைய மதிப்பினை அளவிடுவதற்கோர் உரையணியாகவும் நம்மிடை விளங்குவார் ●





**தொண்டன்**

**சமய ~ சமூக ~ இலக்கிய வெளியீடு**

ஆசிரியர் : அருட்தந்தை. லெஸ்லி ஜெயகாந்தன்
முகவரி : சமூகத் தொடர்பு நிலையம், அ.பெ.எண் - 44 மட்டக்களப்பு.
தொலைபேசி : 065 - 2226486
ஒரு வருட சந்தா : 500/=




**இருளின் ஊடாக ஒளியைப் பாருங்கள்.**

# கிழக்கிலங்கையில் தொலையும் தொன்மைகளும் தொன்மைக் கிராமங்களும்

செல்வி.க.தங்கேஸ்வரி (தொல்லியல் ஆய்வாளர்)

**முன்னுரை**

**ஒரு நாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட கால நிகழ்ச்சிகளை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து காட்டுவது தொல்லியல் ஆய்வுகளாகும். அதற்கு உதவியாக புவிச்சரிதவியல், மானிடவியல், சாசனவியல், நாணயங்கள், இலக்கியங்கள், ஓலைச்சுவடிகள், கர்ணபரம்பரைக் கதைகள்** போன்றனவும் துணைபுரிகின்றன. இப்படிப் பல்வேறு ஆய்வுகள் மூலம் **இலங்கைத் தீவின் ஆதிக் குடிகள் "ஆதித்திராவிடர்"** என்பது தெளிவாக நிறுவப்பட்டுள்ளது.

ஆதித் திராவிடர் இயற்கை, லிங்க வழிபாட்டையும் சூல, வேல், நாக, யக்ஷ வழிபாட்டினையும் உடையவர்களாவர். இவர்களை ஆய்வாளர்கள் **"ஓஸ்ரலோட்"** அல்லது **"வொடொட்"** என அழைத்த னர். இவர்கள் பேசிய மொழி **"ஓஸ்ரிக்"** எனப்படும்.

ஆதித்திராவிட மொழி **'திராவிடி'** என வழங்கி பின்னர் **'தமிழி'** ஆகி தமிழாகிறது. இத்தீவில் பெரும் பகுதியில் வாழ்ந்தவர்களும் இம்மக்களே. இயக்கர், நாகர், வேடர் என வாழ்ந்தவர்களும் இத்திராவிட மக்களே. சிங்கள மக்களின் முன்னோடி எனப்படும் விஜயன் இத்தீவிற்கு வரும்போது இருந்தவர்களும் இவர்களே.

இலங்கையில் கிழக்கு, வடக்கு கரையோரம் முழுவதும் வாழ்ந்தவர்களும் இத்திராவிட மக்களே. இலங்கையில் விஜயன் வரும் முன்னும் பல லிங்கக் கோயில்களும், வேல் கோயில்களும் இருந்ததை "மகாவம்சம்" போன்ற சிங்கள வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. கரையோரப்பிரதேசமெங்குமே அக்கோயில்களும் அதனை வழிபட்ட தமிழ் மக்களுமே வாழ்ந்தனர். தேவநம்பியதீஸனின் ஆட்சியின் போது பௌத்தமத வருகையுடன் பல தமிழர்கள் தமிழ் பௌத்தராகின்றனர். பௌத்த மதம் அரசமதமாகியது. சிங்கள மொழியும் உருவாகியதுடன் பௌத்தமும், சிங்களமும் ஒன்றாயின. தமிழ் மொழியும் இந்து சமயமும் அருகிக் கொண்டே போகின்றதொரு நிலைமை ஏற்பட்டது. அதன் தாக்கம் வாழ்விட பிரதேசங்களில் ஏற்படத்தொடங்கின. பலன்? தொன்மைகள் தொலைகின்றன தொன்மைக் கிராமங்கள் பெயர் மாற்றம் பெறுகின்றன. குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதால் பெயரே இல்லாமல் போகிறது.

தமிழ் இனம் சிறுபான்மை இனமாகிறது. மொழியியல் ரீதியில் ஆக்கிரமிக்கப்பட்டு பெரும்பான்மை இனத்தோடு அண்டி வாழும் தமிழ் மக்களும் மொழியும் அருகிப்போகிறது. இடைக்காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளால் பூர்வீக மக்களும் புகலிடம் தேடி வேறு நாடுகளுக்கு ஓடிக்கொண்டே இருக்கின்றனர்.

எமது பண்டைய வன்னிமை

கள் சிங்களத்தில் **'ரட்ட'** எனவாகிவிட் டன **குளம்** என்பது **'வெவ'** எனவும் உதாரணம் கலாவெவ, **மாதுறை என்பது 'மாத்தற' தேவேந்திரமுனை என்பது 'தெவினுவர', மாயவனாறு' என்பது 'தெதுறு ஓயா', காளிதேசம் என்பது 'காலி', கடம்ப நதி என்பது 'மல்வத்து ஓயா', பட்டிப்பளையாறு என்பது 'கல்லோயா', முதலிக்குளம் என்பது 'மொரவெவ', மணலாறு என்பது 'வெலிஓயா', பார்வதி கிராமம் என்பது 'பதவிய', திருகோணமலை என்பது 'திரிக்கு ணாமலே', அரிப்பு சந்தி என்பது 'அலிஒலுவ' யாழ்ப்பாணம் என்பது 'யாப்பனே'** எனவும் நாடு முழுவதுமே தமிழ் பெயர்கள் மாற்றப்பட்டு வருகிறது. இப்படித் தொலைந்துபோகும் தொன்மையும் தொலைந்துபோன கிராமங்களைத் தேடுவதும் இக் கட்டுறையின் நோக்கமாகும். விரிவஞ்சி கிழக்கை மட்டுமே தேடலாம்.

### 2.கிழக்கிலங்கை

கிழக்கிலங்கையில் 1962ம் ஆண்டுவரை திருகோணமலை,மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. தற்போது அம்பாறை மாவட்டம் என்று அழைக்கப்படும் பிரதேசம் 1962க்குப் பின்னரே தனியொரு மாவட்டமாகியது. அது முன்பு மட்டக்களப்பு மாவட்டதுடன் இருந்தது. அங்கு காலம் காலமாக வசித்து வந்த தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். **அம்பாள் ஏரி என இருந்த இடம் அம்பாறை என மாற்றப்பட்டு** சிங்கள பெயர்களாக மாற்றம்பெற்றன.

1962க்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டம் எனப்பட்ட பிரதேசம் தெற்கே குமணை தொடக்கம்வடக்கெ வெருகலை வரை நீண்டு பரந்திருந்த பிரதேசமாக இருந்ததை பல ஆதாரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இதேபோல் பல தனித் தமிழ் பிரதேசங்கள் இருந்துள்ளன.

### 3. தனித்தமிழ் பிரதேசங்களில் தன்னாட்சி வன்னிமைகள்

1669 ஆனிமாதத்தில்யாழ்ப்பாண குடா நாடும் மேற்குக் கரையோரமும் போர்த்துக்கேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இதற் கென தனி ஆட்சியமைப்பையும் அவர்கள் நிறுவியிருந்தனர். ஆனால் கிழக்கே இருந்த வன்னிமைகள் போர்த்துக்கேயருக்கு திறை கொடுக்க விரும்பவில்லை. கண்டி மன்னனின் ஆணையையும் ஏற்கவில்லை.

தன்னாட்சி வன்னிமைகளாக கிழக்கு கரையோரம் **"கொட்டியாரப் பற்று" "பழுகாமம்", "பாணமை"** ஆகிய மூன்று வன்னிமைகளும் கண்டி மன்னனிடம் பாதுகாப்பு கோரியிருந்தன. எனினும் தன்னாட்சிப் பிரிவுகளாகிய தனித் தமிழ் பிரதேசங்களாகவே இவை செயற்பட்டன. மகாவலி ஆற்றுக்குக் கிழக்கேயுள்ள நிலப்பகுதிகள் குமுக்கன் ஆற்றுக்கு கிழக்கேயுள்ள நிலப்பகுதிகள் இவ்வன்னிமைக்கு உட்பட்டிருந்தன.

### 4. தமிழகம் பற்றி றொபர்ட் நொக்ஸியின் குறிப்பு

**கிபி 1660ல் றொபர்ட் - நொக்ஸ்** என்ற ஆங்கிலேயன் கண்டி மன்னனின் தளபதிகளால் திருகோணமலையில் வைத்து சிறைபிடிக்கப்பட்டான். 1667ல்

தப்பியோடிய நொக்ஸ் தமிழகம் பற்றி கூறியுள்ளமை முக்கியமானவை. **தமிழினம் இத் தீவில் தனியினமாக வாழ்வதும் சிங்கள மக்களைக் காட்டிலும் நாகரீக முடையவர்களாக வாழ்ந்தமை** யையும் சுட்டிக்காட்டியுள்ளான். தப்பியோடும் வழியில் அநுராதபுரம் அடைந்த நொக்ஸ் தான் கண்டவற் றையும் கூறியுள்ளான். **சிங்கள மொழி தெரிந்தோர் எங்கும் இல்லை எனவும் ஊர்களிலும், வழிகளிலும், கடைகளிலும் தமிழரே வாழ்ந்தனர்** எனவும் கூறியுள்ளார். அருவிவரை சென்ற நொக்ஸ் வழி நெடுகிலும் தமிழர் வாழ்கின்றமை யையும் கைலாய மன்னனின் ஆட்சியில் இருந்தமையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### 5. அட்சியன் ரேலன்ட் தமிழினம் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை

பலர் இவ்விதமான குறிப்புகள் கூறியிருந்தாலும் 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்குவந்த **அட்சியன் ரேலன்ட்** இத்தீவின் பழமை பற்றிக் கூறியுள்ளான். **தீவின் பெரும்பகுதி தமிழர்வசம்** இருந்ததாக கூறும் இவன் ஒல்லாந்தர் காலத்தில் கரையோரத்தி லுள்ள துணைக் கண்டத்திற்கு அருகா மையிலுள்ள ஏனைய மாவட்டங்களி லும் தமிழ்மொழி பேச்சு வழக்கில் இருந்துள்ளது என குறிப்பிட்டள்ளார்.

### 6. தமிழகம் பற்றி கிறிஸ்தோபர் சுவைட்சர் கூறியுள்ளது

கி.பி 1700ல் ஒல்லாந்தர் காலத்தில் வந்த **கிறிஸ்தோபர் சுவைட்சன் இத் தீவின் தமிழ் குடிகள் காலி, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, நீர்கொழும்பு கரையோரம்** வரை வாழ்ந்தனர் என குறிப்பிட்டுள்ளார். **வன்னி நாட்டு தமிழரை தவிர ஏனையோர் ஒல்லாந்தர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தனர்** எனக் கூறியுள்ளார். இலங்கையில் கரையோரப் பகுதியை ஆட்சிக்குட் படுத்தியிருந்த ஒல்லாந்தர் அவற்றை ஆறு பிரிவுகளாகப் பிரித்தனர். அவை வருமாறு.

1. பெந்தொட்டை ஆறு தொடக்கம் தெதுறு ஓயா வரையுள்ள பிரதேசம் - கொழும்பு ஆட்சி மாவட்டம்.
2. தெதுறு ஓயா தொடக்கம் மோதரகம ஆறு வரையுள்ள பிரதேசம் - புத்தளம் கற்பிட்டி ஆட்சி மாவட்டம்.
3. மோதரகம ஆறு தொடக்கம் வடக்கே குடா நாடு, ஆகியவற்றை உள்ளடக்கி கிழக்கே கொக்கிளாய் வரையுள்ள பிரதேசம் - யாழ்ப்பாண ஆட்சி மாவட்டம்.
4. கொக்கிளாய் தொடக்கம் கிழக்கு கரையோரம் தெற்கே வெருகல் ஆறுவரை உள்ள பிரதேசம் - திருகோணமலை ஆட்சி மாவட்டம்
5. வெருகல் ஆற்றிலிருந்து தெற்கே குமுக்கன் ஆறுவரை உள்ள பிரதேசம் - மட்டக்களப்பு.
6. குமுக்கன் ஆற்றிலிரந்து தெற்கே ரோகணம், பெந்தோட்டை ஆறு வரை உள்ள பிரதேசம் - காலி மாவட்டம்.

-தொடரும்-

சிறுவர் சிறுகதை

நிலா தமிழின்தாசன்

# உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்



**2012 - தேசிய கலை இலக்கியப் பெருவிழாப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் (திருகோணமலை) 2ம் பரிசு பெற்றது.**

முரளி சரியான குழப்படிகாரன். பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்ல மாட்டான். படிப்பிலும் கவனம் செலுத்த மாட்டான். பெற்றோர், ஆசிரியர் கூறும் நல் உபதேசங்களையோ அறிவுரைகளையோ கேட்பதில்லை அவன்.

கையில் 'சுண்டுவில்லும்' சிறு கற்களும் கொண்டு திரிவான். கண்ணில் தெரியும் குருவிகள் மீது சுண்டு வில்லால் குறிபார்த்து அடிப்பான். கல்லடி பட்டு அவைகள் விழுந்து துடிப்பதைப் பார்த்து அவன் ரசிப்பான். புறா போன்ற பறவைகளின் இறைச்சியை நெருப்பில் சுட்டுத் தின்பான்.

அவனது அம்மா எவ்வளவோ அறிவுரைகளை நாளாந்தம் அவனுக்குக் கூறுவார்.

**பொய் சொல்லக் கூடாது, களவு செய்யக் கூடாது, ஆசிரியர் கூறுவதைக் கேட்க வேண்டும். பெரியோரிடம் பணிவாக நடக்க வேண்டும். எந்த உயிர்களையும் துன்புறுத்தக் கூடாது. படித்து முன்னேறவேண்டும், நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லவனாக வாழ வேண்டும்.**

என்று தாயார் கூறும் போது மட்டும் சரியென்று தலையாட்டுவான். சிறிது நேரத்தில் அவையெல்லாம் மறந்து மறுபடியும் சுண்டு வில்லோடு புறப்பட்டு விடுவான். இவனது செயலைக் கண்டு பல முறை இவனது தந்தையார் இவனைத் தண்டித்திருக்கிறார். அவன் திருந்துவதாய் இல்லை.

வழமைபோல் அவனது சுண்டு வில்லோடு அவனது மாமாவான சரவண முத்து வீட்டிற்குச் சென்றான். மாமாவின் வீட்டு முற்றத்தில் நன்கு செழித்து வளர்ந்த தோடை மரமொன்று இருந்தது. அதில் 'தினையான்' குருவி ஒன்று கூடு கட்டி வசித்து வந்தது. முரளி போன அச்சமயம் கூட்டிற்குள் இருந்து தனது குஞ்சுகளுக்கு உணவூட்டி விட்டு தாய்க் குருவிவெளியில் அமர்ந்திருந்தது.

இதைக் கண்ட முரளி அந்தத் தாய்க் குருவி மீது குறிபார்த்து அடித்தான். அது அவ்விடத்திலேயே சுருண்டு விழுந்து இறந்தது. இதை அவனது மாமா கண்டு விட்டார். "அடேய் மடையா! அநியாயம் பண்ணி விட்டாயே இனி

அந்தக் கூட்டில் இருக்கும் குஞ்சுகளுக்கு உணவூட்டிக் காப்பாற்றுவது யார்?" என்று கேட்டபடி ஏணியை வைத்து ஏறிப்பார். எத்தனை சின்னஞ்சிறு குஞ்சு கள் பட்டினியால் துடிதுடித்துச் சாகப் போகின்றன. என்பதைப் பார். இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடாது. என்று ஏசினார்.


முரளி ஏறிப்பார்த்தான். நான்கு சிறிய பூமொட்டுக்கள் போன்ற சிறிய குஞ்சுகள் வாயைத் திறந்தபடி கீச்! கீச் என்று ஓலமிட்டன. முரளி மிரள மிரள அவைகளைப் பார்த்தான். அவனை அவதானித்த மாமா "பார்த்தாயா உன் பாதகச் செயலால் ஒரு பாவமும் அறியாத அத்தனை சின்னஞ்சிறு உயிர்களும் துடிதுடித்துச் சாகப் போகின்றன. இனி இவைகளைக் காப்பாற்ற உணவூட்டயார் வருவார்? உன்னால் இவைகளைக் காப்பாற்ற முடியுமா?" என்று கேட்டார்.

மாமாவின் பேச்சால் நிலமை யை உணர்ந்த முரளியின் கண்களால் நீர் வழிந்தது. "மாமா என்னை மன் னித்துக் கொள்ளுங்கள். இனி இப்பிடியான அநியாயம் செய்யமாட்டேன். இதோ சுண்டுவில் இதை நீங்களே அடுப்பில் போட்டு எரியுங்கள்." என்று அவர் முன்னாலே கீழே போட்டான். பின்னர் கூட்டோடு குஞ்சுகளை ஏந்திய படி கீழே இறங்கி வந்தான்.

"மாமா இனி இவைகளைச் சாக விடமாட்டேன். நானே உணவூட்டி வளர்த் துப் பின்னர் பறக்க விடுவேன்." என்று மனம் மாறியவனாய் தனது வீட்டிற்கு அவைகளைக் கொண்டு சென்றான்.

தாயிடம் நடந்த நிகழ்வைக் கூறி அழுது மன்னிப்புக் கோரியதோடு "நான் இனி ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்று படிப்பேனம்மா எனவே நான் பாடசாலை விட்டு வரும் வரை இந்தக் குஞ்சுகளை கவனமாக நீங்கள் தான் பார்க்க வேண்டும் என்றும் கெஞ் சினான்"

தாயார் மகனின் மனமாற்றம் கண்டு மகிழ்ந்து மகனை அணைத்து முத்தமிட்டார். குஞ்சுகளைக் கவனமா கப் பராமரிப்பதாகவும் உறுதி கூறினார். மறுகணமே மனமகிழ்வோடு புறப்பட்டு முரளி பாடசாலைக்குச் சென்றான். தாயார் மனங்குளிர அவனை வாழ்த்தி வழியனுப்பி நின்றார். மகிழ்ச்சி பொங்க.




**பெண்**

ஆசிரியர் : விஜயலட்சுமி சேகர்

முகவரி : இல.55, லேடி மன்னிங் டிறைவ், மட்டக்களப்பு.

தொலைபேசி : 065 2223297

ஆண்டு சந்தா : 200/=


"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய் உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"



எளிமை வெற்றியின் இரகசியமாகும்.

# சாதனை

**களுதாவளை - கருணா**



சாதனை என்னும் இம் மணிக் கதை நாட்டில் கொரூர இன முறுவல் நிலவிய காலத்தில் பயங்கர யுத்த சூழ்நிலையில் மக்கள் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்த போது எழுதப் பட்டது. இது 10.07.1998ம் திகதி ஞாயிற்று தினக்குரலில் வெளிவந் திருந்தது. இருப்பினும் இக்கதை யின் இறுதியில் வரவேண்டிய 02.02.2200 எனும் திகதி விடுபட்டு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இவ்வேளையில் இலங்கை நாடா னது செயற்கைக்கோள் அனுப்ப முயற்ச்சி செய்து கொண்டிருப்பத னால் இக்கதையை மறுபிரசுரம் செய்வது பொருத்தமானது என கருதுகின்றோம். அத்துடன் அவ் வேளையில் விடுபட்ட 02.02.2200 எனும் திகதியும் கதை எழுத்தா ளரின் அனுமதியுடன் சேர்த்துள் ளோம். என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

(ஆ-ர்)

BATCO நாளை விண் வெளிக்கு ஏவப்படுவதற்கான சகல ஆயத்தங்களும் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. நினைவு முத்திரை வெளியிடல், இலவச மட்டுநகர் கொழும்பு பயண எற்பாடுகள். இலங்கை மக்கள் சர்வதேச சமூகத்துடன் இலவச மாகத் தொலை பேசியில் உரையாட வசதிகள் போன்ற வாய்ப்புக்களை மக்கள் நன்றாய்ப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர்.

தொலைபேசி வானொலி மூல மாக உலக நாடுகளுக்கான நேரடி ஒளி - ஒலிபரப்புகளுக்கான வெளிநாட்டு வர்ணனையாளர்கள் ஏற்கனவே கொழும்பு வந்து சேர்ந்துவிட்டார்கள். இந்தியா பாக்கிஸ்தான் போன்ற அயல் நாடுகளில் இருந்து விஞ்ஞான மேதை கள் ஆராய்ச்சியாளர்கள் பலர் ஒருவார மாக இங்கு வருகை தந்து கொண்டிருக் கின்றார்கள்.

உலக நாடுகளில் இத் திருநாட்டின் பெருமையையும் புகழை யும் பலர் பேசிக்கொண்டிருக்கின்றனர். முன்னொரு காலத்தில் விளையாட்டின் மூலம் சர்வதேச ரீதியில் புகழைடைந்த இந்நாடு இன்றோ நவீன விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஆசியாவின் முன்னணி நாடாக மாறி வருகின்றது. Batco ஒரு செயற்கைக் கோள் ராஜபக்ஷ - பானு கோபன் விஞ்ஞானிகளின் வழிகாட்டலில் இலங்கை விஞ்ஞானி களால் உருவாக் கப்பட்ட முதல் செய ற்கைக்கோள் ராஜபக்ஷவும் பானுகோபனும் பேராதனை பொறியியல் பீட மாணவர்களாய் இருந்த போதே அதி திறமைசாலி களாக இனங்காணப்பட்டவர்கள்.

இவர்களது திறமைகளும் பல சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கல்விமான்கள் பலரால் அவ்வப்போது பாராட்டப்பட்டது. ஆனால் அப்போதைய சூழ்நிலையில் சாதாரண அரசியல் வாதிகள் பாராளுமன்ற உரைகள் தொடர்பான விவாதங்களே கற்றோர்களினதும் மற்றவர்களினதும் காலத்தைக் கரைத்துக் கொண்டிருந்தன.

ராஜபக்ஷ கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவன். பானு கோபன் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவன். இருவரும் சாதாரண குடும்பத்தில் பிறந்து தங்கள் கல்வியைத் தொடர்ந்தவர்கள்.

இருவரதும் பிறந்த இடங்களில் சேர்க்கையே Batco பெயரானது.

Dr. Walton பேராதனைப் பொறியியல் பீட விரிவுரையாளராகக் கடமை புரிந்தவர்.

இங்கிலாந்து நாட்டவர். அப்போதே இவர்களுக்கு இலங்கை சரிப்படாது என்பதைப் புரிந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் இருவரது கல்வியையும் அமெரிக்காவில் தொடர வழிகாட்டியவர்.

அமெரிக்காவிலும் மேல்படிப்பு ஆராய்ச்சி என இருவரும் ஒன்றாகவே செயற்பட்டனர். விண்வெளித் துறையிலே இருவரது கவனமும் இருந்தது. தங்கள் வாழ்கையின் 20 வருட காலத்தை அமெரிக்க நாட்டிற்காக உழைத்தவர்கள்.

விண்வெளி ஆராய்ச்சித் துறையில் பல சாதனைகளை அமரிக்கா ஈட்டுவதற்கு இருவரது பங்களிப்பும் வகித்த இடத்தை அந்நாடு பெரிது படுத்தாவிட்டாலும் உலகம் உண்மையை உணர்ந்து விட்டது.

இருவரும் பல தடவைகளில் பல்வேறு சோதனைகளைத் தாண்டிய பின்பே உலக மாமேதைகளாக அங்கீகாரம் பெற்றவர்கள்.

பல பரிசுகள் பெற்றுக்களைத்து விட்ட அவர்களுக்கு அவரகளது விருப்பத்தை நிறைவேற்ற கிடைத்த கொடைதான் Sri-Aero ஆய்வுகூடம் இருவரது விருப்பமும் இலங்கையில் ஒர் விண்வெளி ஆராய்ச்சிக்குரிய களம் அமைக்கப்பட வேண்டும். என்பது மாத்திரந்தான். இவ்

விருப்பத்தை நிறைவாக்கினால் தான் நன்றியுணர்வை உலகம் புரிந்து கொள்ளும். இது அமெரிக்காவின் எண்ணம். எணணத்தைச் செயலில் காட்டத் திட்டங்கள் போட்ட வேளை இங்கு பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மறியல் போராட்டங்கள் எதிர்ப்பு ஊர் வலங்கள், அமெரிக்க ஏகாதி பத்தியம் இலங்கையில் காலூன்ற இது வழிவகுக்குமாம்.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முறியடித்து ஆய்வுகூடம் அமைப்பதற்கு முன்னோடியாகச் செயற்பட்டவர் இலங்கையின் விஞ்ஞானக் கைத் தொழில் அமச்சர் மொஹமட் யூசுப்.

இவருடனும் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றவர் இவர். கலைப் பீடத்தில் இருந்தாலும் இரு தலைகளும் பல்கலைக்கழகத்தில் பாராட்டப்பட்ட வேளைகளிலெல்லாம் முன் வரிசையில் இருந்து ரசித்தவர்.

இன்றோ ஆய்வுகூடம் அமைத்ததன் பயனை முழு நாடும் கண்டு விட்டது. தொலைக்காட்சிகளின் ஊடாகப் பல விஞ்ஞானிகளின் பேட்டிகள். பலரது நேர்முக வர்ணனைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. முழு நாடே குதூகலித்துக் கொண்டிருக்கின்றது.

இது தொடர்பான சகல தொலைக்காட்சி நிகழ்வுகளையும் தவறாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ரவி க.பொ.த (உயர்தர) விஞ்ஞானப் பிரிவு மாணவன். நிகழ்ச்சிகளை ரசித்துக் கொண்டிருந்த போதே விஞ்ஞானியாக வரவேண்டும் என்னும் இலட்சியத்திற்கு எண்ணெய் போட்டுக் கொண்டிருப்பான் அவன். தொடர் நிகழ்ச்சியினூடே திடீரென விஞ்ஞான கைத்தொழில் அமைச்சின் செய்திக் குறிப்பொன்று வாசிக்கப்பட்டது.


**இலங்கை நாட்டின் முதற் செயற்கைக் கோளான Batco நாளை விண்வெளிக்கு ஏவப்படுவதற்கான சகல ஏற்பாடுகளும் முடிவடைந்து விட்டன. நாளை காலை 11.14 மணிக்கு இந் நிகழ்வை அகில உலகும் நேரடியாகப் பார்க்கக் கூடியவாறு நேரடி ஒளிபரப்பு வசதிகள் இந்தியாவின் Sat-14 செயற்கைக் கோளினூடாக மேற்கொள்ளப்படும். இதேவேளை அமைச் சரவையின் விசேட கூட்டத் தொடரின் ஆலோசனைக் கிணங்க Sri-Aero ஆய்வு கூட விஞ்ஞானிகள் செயற்கைக் கோளின் பெயரை Cobat என மாற்றுவதற்கு எடுத்த முடிவை அஸ்கிரிய பீட சங்க நாயக்கர் பலிபாலந்த மூலவர்ண தேரோ வெகுவாகப்பாராட்டியுள்ளார்.**

அதி காலை 2மணி வரை புத்தகத்துடன் இருந்து கட்டிலுக் குச் சென்ற ரவி பரீட்சை நினைவு தன்னை உறுத்தக் கண்விழித்தான்.

மின்குமிழ் எரிந்து கொண்டிருந்தது. நேரம் அதிகாலை 4.20 மணியைக் காட்டிக் கொண்டிருந்தது. தினம் வெவ்வேறு நிற ஒளியால் திகதியைக் காட்டும் மின்சார நாட்காட்டி நீல ஒளியினூடாக நாளைக் காட்டிக் கொண்டிருந்தது. 02.02.2200

# யாரிடம் சொல்வது

கலாபூசணம் டாக்டர், எம்.கந்தசாமி, ஊற்றுநீரான்



அந்தி வானம் கறுக்க
ஆவணி மாத மழை
தங்கு தடையின்றி
தான் பொழியுமென்று
தம்பிப் போடியார் நினைத்திருக்க
செக்கச் சிவந்து சீரற்ற நிலையில்
செங்கதிரோன் நிமிர்ந்து நின்றான்
முன்மாரி வேளான்மை
முடித்து விட்டால் பின்
மோசமில்லை எங்களுக்கு
மழையோ பொழியவில்லை
மாயம் என்ன? என
ஏங்கிப் போடியாரும்
இருந்தார் வயல் காட்டில்
உழுது நிலத்தை
உயர்வாகப் பயன்படுத்த
இயற்கை வரவில்லை
நிறைந்த புழுதி
வயல் நிலத்தில்
ஆண்டவனை வேண்டி
ஆலயத்தில் பூசை பல
வேண்டித் தவமிருந்தும்
வீணாகி விட்டது.
காலத்தின் கொடுமை
மோசம் போயாச்சு
ஐப்பசியில் ஓர் மழை
அவசரமாய் விதைப்பு
மிச்சமில்லாமல்
விதை நெல்லை வீசிவிட்டார்.
தொடர்ந்து அடை மழை
சொல்ல வொணா கால நிலை
எங்குதான் சொல்வது
இயற்கை நிலை மாற்றம்
விட்டது மழை தொடரவில்லை
வாடி வதங்குது பயிர்
வாயால் சொல்ல வொணா
ஏர் பிடித்த கை
ஏங்கித் தலையில் வைத்து
மோசம் போய் விட்டோம்
என்று முணு முணுத்து
காய்ந்து கிடந்தார் கமக்காரர்
வெயிலின் கொடுமை
வீட்டில் பொருளில்லை
அத்தனையும் வட்டிக் கடையில்
வளருது வட்டி
மாதம் மூன்று
மாயமாய் போயாச்சு
வெயிலின் கொடுமை
வேளான்மை வெந்து போச்சு
அறுவடையை நம்பிய
அனைவரும் சோகத்தில்
யாரிடம் சொல்வது
ஆண்டவன் தான்
பார்க்க வேண்டும்.




**மறுகா**

**புதிய தலைமுறைக்கான உடைப்பு**

ஆசிரியர் : த.மலர்ச்செல்வன்
முகவரி : ஆரையம்பதி
தொலைபேசி : 0776084756
பிரதி ஒன்றின் விலை : 100/=




**புதியனவற்றை படைக்காத தேசம் உலகில் முன்னேறாது.**

இதுவரை சுமார் 1130 விழிப்புணர்வு நாடகங்களை 300க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிகழ்த்திய கதிரவன் கலைக்கழகத்தின்

# விழிப்புணர்வு வீதி நாடகம் - முன்பள்ளியின் முக்கியத்துவம்

**தயாரிப்பாளர் : கதிரவன் த.இன்பராசா.**

PIN நிறுவனத்தின் அனுசரனையுடன் பல கிராமங்களில் நிகழ்த்தப்பட்ட வீதி நாடகம்.

**பாடல் :**

**கூடி வாழும் மக்கள் ஓடி வாருங்கோ**
**நாடி வந்து நல்ல செய்தி கேளுங்கோ.**
**பாடி யாடி பாலர் பள்ளி போகின்ற**
**பாலர்களின் பெற்றோர் ஒன்று சேருங்கோ**
**(கூடி வாழும் மக்கள் . . . .)**

**ஓடி ஓடி வாருங்கோ கூடி நின்று பாருங்கோ**
**ஓடி ஓடி வாருங்கோ கூடி நின்று பாருங்கோ**
**மூன்று வயது முடியப் பிள்ளை முன் பள்ளிக்குப் போகனும்**
**ஈன்றெடுத்த அப்பா அம்மா அக்கறையாய் அனுப்பனும்**
**சான்றோனாகி பிள்ளை எதிர்காலம் நன்றாய் மலரவே**
**சந்தோஷமாய்க் கேட்டிடுங்கோ முன்பள்ளிதான் முக்கியம்**
**(கூடி வாழும் மக்கள் . . . .)**

(பாலர் பாடசாலை செல்லும் வயதுடைய ஒரு பிள்ளையின் பாத்திரம் - பூபாளன். பாடசாலைக்கு போவதற்கு விருப்பமின்மையை சபையில் தெரியப்படுத்தல்)

**பூபாளன் :** போகாட்டன் . . . என்டால் போகாட்டன்தான். நான் போகாட்டன் எனக்கு . . . நேஜரிக்குப் போக விடுப்பமேயில்லை . . . இந்த அப்பன் . . . கள்ளன் ! கிழவன்! விடுறானில்லை . . அம்மா தோக்கனா ஆழுடா அச்சோடா போவனாம் போவனாம் எண்டு மாமிட ஊட்ட போவட்டாம். என்டுறவ அவரு போவட்டாம் நேஜரிக்கு நேத்து துரட்டையால எரியிறாரு நான் விளாடப் பொறன். பீ ... பீ ... கீ ... க் கீ ... க் சுக்கு பக்கு . . . சுக்கு பக்கு . . .

(பூபாளனின் தந்தை வெடியரசன் - பூபாளனை பாலர் பாடசாலைக்கு அனுப்புவதற்காக தேடிவருதல், பூபாளன் ஒழித்தல்)

**வெடியரசன் பாடல் :**

**வீடு புள்ளா நல்லாத் தேடியாச்சி - கள்ளன்**
**கோடிப் பக்கம் குந்தி ஓடியிருக்கான்**
**மாடு போல வேலி பாஞ்சிருக்கான் - கள்ளன்**
**மாமரம் ஏறிக் குதிச்சிருக்கான்.**

**பின்னணிப் பாடல் :**
**கண்டுபிடி மாமா! கண்டுபிடி - அந்த**
**காட்டுப்பக்கம் கள்ளன் குந்தியிருக்கான்**
**குண்டு உருட்டியே நொண்டியடிச்சவன்**
**உன்ட குரல் கேட்டு ஓடிப்போயிற்றான்.**

**வெடியரசன் பாடல் :**
**நாலு வயது முடிஞ்சி போச்சி - ஒரு**
**நாளேதான் நேசரி போயிருக்கான்**
**பாலும் பழம் முட்டாய் வச்சிருக்காரென்று**
**பார்த்தா ஒருக்கா நீ சொல்லுமடா**

**பின்னணிப் பாடல் :**
**கண்டுபிடி மாமா! கண்டுபிடி - அந்த**
**காட்டுப்பக்கம் கள்ளன் குந்தியிருக்கான்**
**குண்டு உருட்டியே நொண்டியடிச்சவன்**
**உன்ட குரல் கேட்டு ஓடிப்போயிற்றான்.**

(பூபாளனைத் தேடிப் பிடிக்கும் நோக்கத்துடன் வெடியரசன் நாடகம் நடிக்கும் இடத்திலிருந்தகன்று வெளியேறுதல்)

(சோமசுந்தரம் சபையில் தோன்றுதல் பார்வையாளர்களிடம் உரையாடுதல்)

**சோமசுந்தரம்:** கேளு புள்ள! கதைய என்ட பொஞ்சாதி ஒன்ட சொந்தக்காரி. இளையவள் இந்துக்குட்டிய பெத்து ரெண்டு மாதத்தில கண்ண மூடித்தா. இப்ப புள்ளைக்கு மூன்றரை வயசாகுது. நேஜரிக்குப் போறவள். அம்மாவும் நான்தான், அப்பாவும் நான்தான். நான் எவ்வளவு கஸ்டப் படுறன் எண்டு உனக்கு நல்லாத் தெரியும். மூத்தவன் தறுதல பிரகாசி, முகத்தில மீசை முளைக்க முதல் முடக்கடிப் பொன்னன்ட மகளக் கூட்டித்து ஓடித்தான். அவன் நேசரிக்குப் போனதும் இல்ல பள்ளிப் பக்கம் மழைக்குக் கூட ஒதுங்கினதும் இல்ல. அந்தப் பொட்ட எட்டாம் ஆண்டு படிக்கக் குள்ளதானாம் இந்த கசவாரத்தோட லவ்வாம். இப்ப படாத பாடு படுறானாம். படிச்சிருந்தால். . . அந்தக் காலத்த விடு நாமல்லாம் படிக்கல்லதான். இந்தக் காலம் அப்பிடியா? எவ்வளவோ வசதி வாய்ப்பெல்லாம் இருக்கு.

(இவ்வேளை பாலர் பாடசாலை செல்லும் ஆயத்தங்களுடன் சோமசுந்தரத்தின் இளைய மகள் இந்துஜா வருதல் )

**இந்துஜா பாடல் :**
**பாலர் பாடசாலைக்குப் பாடிப்பாடிச் செல்கின்றோம்.**
**பாலர் ஒன்று சேர்ந்ததுமே ஆடியாடிச் செல்கின்றோம்.**
**உத்தி ஊஞ்சல் ஆடுவோம் உயரம் ஏறி சறுக்குவோம்**
**கத்தி வட்டம் போடுவோம் குதிரை ஏறித் துள்ளுவோம்.**

**சோமசுந்தரம்:** ஆகா . . ஆகா என்ன சோக்கான பாட்டு (சபையைப் பார்த்து) பார்த்தையளா? என்ன சோக்கா . . . வடிவா படிக்கிறாள் புள்ள நேசரிப் பாட்டா மெனே!

**இந்துஜா :** (தலையை ஆட்டுதல்) ஓ . . .இன்னம் நிறையப் பாட்டுத் தெரியும்.

**சோமசுந்தரம்:** படிக்கனும்மெனே! படிக்கனும் (சபையைப் பார்த்து) படிக்காத கௌ . . உழைச்சி உழைச்சி ஓடாத் தேஞ்சி போயித்துகள். நானுந்தான். குடிச்சிக் குடிச்சி குடும்பம் சீரழிஞ்சி போய்த் திரியுதுகள். அது நான் இல்ல. என்ட மூத்தது பிரகாசி (கதைத்த வண்ணம் இந்துஜாவின் பாடசாலைப் பை, தண்ணீர்ப் போத்தல், சாப்பாட்டுப் பெட்டி முதலியவற்றை ஆயத்தம் செய்கின்றார் சோமசுந்தரம்)

**இந்துஜா :** அப்பா . . ! அப்போ . . .! (சோமசுந்தரம் இந்துஜாவின் முகத்தைப் பார்த்தார்) டேஜர் ஒன்றும் பென்சில் ரெண்டும் கலர் பெட்டியும் வாங்கோனும் டீச்சர் . . . டீச்சர் . . . மாம்பழம் ஆனையெல்லாம் ஒட்ட தூள் . . .தேயிலைத்தூள் கொண்டு வரச் சொன்ன நேத்து நேசரிக்கு 'அ', 'ஆ', 'இ' எல்லாம் எழுதினடோ . . 1,2,3,4 எல்லாம் சொன்னடோ.

**சோமசுந்தரம்:** அப்பனே! கடவுளே ! என்ட மகள் ஒரு கணக்கு வாத்தியாரா இல்லாட்டி எங்கயும் ஒப்பிஸ் வழிய ஒரு வேல எண்டாலும் ஒரு கவுமென்டுல பார்க்கனும். அப்பெண்டாத்தான் என்ட பொஞ்சாதிட ஆத்மா சாந்தியடையும்.

**இந்துஜா :** அப்பா ! நான் டொக்டர் உங்களுக்கு ஊசெல்லாம் போடுவன் குழல் வச்சுப் பாப்பன்.

**பின்னணிப் பாடல் :**

**பிள்ளை தன்னைக் கைப்பிடித்து**
**பள்ளி வேக்கை தோளில் போட்டு**
**துள்ளித் துள்ளி நடந்து போரான் - நேசரிப் பக்கம் மச்சான்**
**கல்விச் செல்வம் அழியாது சோமசுந்தரம் மச்சான்**

**அத்திவாரம் உறுதியுடன்**
**அமைஞ்சாத்தான் வீடு பெலம்**
**புத்தியுள்ள அத்திவாரம் பாலர் கல்வியல்லோ - மச்சான்**
**சித்திபெற்று சிறப்படைய கல்வி வேணுமல்லோ.**

(சோமசுந்தரம் இந்துஜாவைப் பாலர் பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் போது ஒழிந்திருந்த பூபாளனை இந்துஜா காணுதல்)


உங்கள் பாதையை நீங்களே தெரிவு செய்ய வேண்டும்.

**இந்துஜா :** அப்பா! அப்பா! அந்தா . . எங்கட நேசரிக்கு ஒருநாள் வந்த பூசானித் தம்பி. நான் சொன்னன் என்ட வட்டரக் களவெடுத்தவன் என்று இவன்தான் அப்பா அடிங்கோ! அடிங்கோ.

**சோமசுந்தரம்:** ஏன் மெனே! பூசானமா? அது வீட்டு மோட்டிலேதான் இருக்கும்.

**இந்துஜா :** பூசானம் இல்லப்பா. "பூசானி" பள்ளிப் பெயர் பூபாளன். வீட்டுப் பெயர் பூசானி டேய்! நேசரிக்கு வரல்லயா? திரிபோஷா வாயா?

**பூபாளன் :** போடி கள்ளி ! முட்டக்கணிண்ணி ! டேஜர் கள்ளி ! எரிவன் ஊமக் கொட்டையால.

**சோமசுந்தரம்:** பேசாம வாமெனே ! அவன் செரியான வாய்க்காரன் போல கிடக்குது. இந்த வயசில இப்படிக் கதச்சான் என்டால் ஆள் வளர்ந்தால் நாமெல்லாம் இருக்கத் தேவல்ல. தூக்கில் தொங்க வேண்டியதுதான்.

(சோமசுந்தரம் மகளை அழைத்துக் கொண்டு நாடகம் இடம்பெறும் இடத்தில் இருந்து வெளியேற பூபாளனைக் கண்ட வெடியரசன் பாய்ந்தெழுந்து ஓடி வருதல் பூபாளன் ஓட எத்தனித்தல்)


**வெடியரசன் :** பூசானி ! வா மகனே வா ! நேசரிக்குப் போக நேரம் பொயிற்று அச்சாப்புள்ள எலுவா வா மகனே தங்கக் குட்டி.

**பூபாளன் :** நான் வரமாட்டன் நேஜரிக்கு நீ போ . . .

**வெடியரசன் பாடல் :**
**வட்டர் வாங்கி வச்சிருக்கன் - நல்ல**
**வடையும் பொறிச்சி வச்சிருக்கேன்**
**முட்டாசியும் வாங்கித் தாரேன் - இந்த**
**பெட்டிக்குள்ள பார் மகனே!**

**பூபாளன் பாடல் :**
**வட்டர் வேணாம் வடையும் வேணாம் - ஒன்ட**
**முட்டாசியும் னெக்கு வேணாம்**
**கிட்ட வந்து புடிச்சையெண்டால் - ஒன்ட**
**மொட்டைய நானும் கடிச்சிடுவன்**

-தொடரும்-

**செங்கதிர்**
**கலை இலக்கிய பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழ்**
ஆசிரியர் : செங்கதிரோன் திரு.த.கோபாலகிருஸ்ணன்
முகவரி : 19, மேல்மாடித் தெரு, மட்டக்களப்பு, இலங்கை.
தொலைபேசி : 065-2227876 / 077-2602634
ஒருவருட சந்தா : 1000/=
"இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை"

# ஓவியத்தில் நவீனம்

**க.மோகனதாசன்**
**விரிவுரையாளர்**
**சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப்பல்கலைக்கழகம்.**

**"பண்டைய கிரேக்க கலை பூரணமான தென்றும் ரஃபயல் ஓவியரனைவரிலும் சிறந்தவரெனவும் எமக்குச் சொல்லித் தரப்பட்டது. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. கிரேக்க கலை பற்றியோ அல்லது ரஃபயலைப் பற்றியோ இன்று நாம் அக்கறை கொள்வதில்லை. எமது முன்னோர்களின் கருத்துக்கள் எமக்கு ஏற்புடையதாயில்லை"**

**- ஓவியர் கீர்க்நெர் -**

நவீனம் கலைத்துறையில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தது. குறிப்பாக ஓவியத்தில் அதன் செல்வாக்கினைப் பார்ப்பதாகவே இக் கட்டுரை அமைகின்றது. நம்மைப் பற்றி யும், உலகைப் பற்றியும் சொல்ல இருக் கும் சிக்கல் நிறைந்த எல்லா வற்றையும் சொல்ல கதைமுறை, விவரணை முறை போதாது என்பதால் நவீன ஓவியம் உருவானது. நவீனத்தின் வருகை பல மாற்றங்களை பல துறைகளில் ஏற்படுத்தியது. மனிதனைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் புதிய தெளிவு உருவாகியதன் காரணமாக ஓவியமும் புதியதோர் மாற்றத்தைப் பெற்றது.

**டாவின்ஸி, ரெம்ராண்ட், ரூபன்ஸ், ரஃபயல்** போன்றோர் தத்ரூப ஓவியங்க ளிலே அதிகம் வெளிப்படுத்தினர். ஆகவே தான் புதுமையுடன் தங்களை அடையாளப்படுத்த வேண்டிய நிலைமை ஓவியர்களுக்கு ஏற்பட்டது. இச்சந்தர்ப் பத்தில் சிக்மண்ட் பிராய்ட்டின் உளப் பகுப்புக் கொள்கை, புகைப்படக் கருவி யின் வருகை, புதிய கண்டுபிடிப் புக்கள், புதிய தத்துவ அறிமுகங்கள் எல்லாம் சேர்த்து நவீன ஓவியத்தை (Modern Art) உருவாக்கியது. நவீன ஓவியத் தின் பொதுவான தன்மைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. **காட்சிப் பாதிப்பு**
2. **தெரிவிக்கும் செய்தி**
3. **வர்ணங்களின் உளவியல் தன்மை**
4. **உணர்ச்சியின் தீவிரம்**
5. **உருவச் சிதைவு**

**காட்சிப் பாதிப்பு (Visual impact)** எனும் போது குறிப்பட்ட காட்சியின் உண்மைத் தன்மை என்பதை விட, அக்காட்சி எம்முள் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதே இங்கு முக்கியமானதாகும். இதனையே ஓவியத்தில் கொண்டு வருதல் வேண்டு மென நவீன ஓவியர்கள் குறிப்பிடுவர்.

சில நவீன ஓவியர்கள் **தெரிவிக்கும் செய்தியை (Massage)** முக்கியமாகக் கருதுவர். வர்ணங்கள் மூலமோ, கோடுகள் மூலமோ பிரச்சினை கள், செய்திகளை வெளிக்காட்டுதல்

ஓவியத்தின் முக்கிய பொறுப்பென இவர்கள் முன்மொழிவர்.

சிக்மண்ட் பிராய்ட்டின் உளப் பகுப்புக் கொள்கை **வர்ணங்களின் உளவியல் தன்மைகள்** பற்றி சிந்திக்கப் பண்ணியது. நீலம் காதலையும் சிவப்பு அடங்காத காமம், வன்முறையையும் வெள்ளை தூய்மையையும் மனதில் ஏற்படுத்துவதாக இவர்கள் கருதினர். இதனால் தான் நீலக் குதிரை மனிதர்களை இவர்களால் வரைய முடிந்தது.

தத்ரூப ஓவியங்கள் விவரணை முறையைச் சார்ந்திருக்க நவீன ஓவியங்கள் நம்முடைய ஒழுங்குணர்ச்சியைச் சார்ந்திருக்கின்றது. இதனால் நவீன ஓவியங்களில் அழகுக்குப் பதில் **உணர்ச்சியின் தீவிரம்** பின்பற்றப்பட்டது. **பிக்காசோ** தன்னுடைய செயலாளரிடம் கேட்டாராம் **"அழகின் எதிர்மறை என்ன என்று தெரியுமா?"** என்று. இவ்வினா ஓவியங்களின் அழகு என்பது உணர்ச்சி களின் தீவிரம் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது.

நவீன ஓவியத்தில் **உருவச் சிதைவு** வற்புறுத்தப்படுகின்றது. அதாவது வாழ்க்கையில் அவதியுறும் மனிதனுக்கு உருவம் இருக்காது என்பதையே இது தெரிவிக்கின்றது. அத்தோடு உருவச்சிதைவே உள்ளடங்கியிருக்கும் உண்மையைக் கொண்டு வரும் எனக் கருதினர். அதாவது உருவமில்லா உருவம் அக நிலையை வெளிப்படுத்தும் என்றனர். ஓவியர் மார்க்குவின் முகமிழந்த மனிதர்களை இதற்கு உதாரணமாகக் கூறமுடியும்.

இந்நவீன ஓவிய வரலாற்றின் அடியே சிற்சில மாற்றங்களுடன் பல ஓவியக் கொள்கைகளும் ஓவியர்களும் உருவாகியிருக்கின்றனர். இவற்றினைச் சுருக்கமாகப் பார்க்கும் போது நவீன ஓவியத்தை மேலும் புரிந்து கொள்ள முடியும்.

## மனப்பதிவு வாதம் (Impressionism)

**இயற்கையின் புறத்தோற்றம் விடுத்து அக நிலையில் ஓவியங்கள் வரையப்பட வேண்டுமெனவும் ஓவியம் மன உணர்ச்சிகளின் சாதனம் எனவும் மனப்பதிவு வாதம் குறிப்பிடுகின்றது.**

மனப்பதிவு வாதத்தின் தலைவர் என **கிளாடி மொனே** குறிப்பிடப் படுகின்றார். **"சூர்யோதயம்"** எனப்படும் இவரது ஓவியம் மனப்பதிவு வாதிகளுக்கு ஆதாரமாக விளங்கியது. மொனே புதிய நுட்பமான பாணியை உருவாக்கிக் கொண்டார். அவர் தனது பாணியில் உருவங்களுக்கோ வடிவங்களுக்கோ முக்கியத்துவம் கொடுப்பதைத் தவிர்த்து விட்டார்.

மனப்பதிவு வாத ஓவியர்களாக **செசான், மொனே, றினோர், பிசாரோ, கோகான், வான்கா** போன்றோரைக் குறிப்பிடலாம். ஓவியன் இயற்கையை இதுவரை எவரும் காணாத வகையில் காண வேண்டும் என **செசானும்** சிந்திப்பதன் மூலம் இயற்கையிலும் மேலானதாக கலையைப் படைக்கலாம் எனக் **கோகானும்** கூறியிருப்பவை இங்கு நோக்கத்தக்கதாகும்.

சமூக அரசியற் கலை நோக்குக் கொண்ட **வான்கா,** தமது ஓவியங்களில் எளிமைத் தன்மையாகவும் நேரடியாக வும் விடயங்களைத் தருவதில் ஆர்வம் காட்டினார். நாம் இயற்கைக்குத் திரும்ப வேண்டும் ஓவியரசனை மூளைக்கு ஓய்வைத் தருதல் வேண்டும் எனவும் குறிப்பிட்டார். இவரது **'சூரியகாந்தி'** ஓவியம் குறிப்பிடத்தக்கதாகும்.

**ஜீன் மரியாஸ்** எனும் இலக்கியவாதி **குறியீட்டு வாதிகளின் அறிக்கை (1886)** எனும் நூலில் **எமிலிஜோலாவை** நிராகரித்து இலக்கி யத்தில் அகவயப்பட்ட கருத்துக்கள் அவசியம் என்றார். இதனால் கவிதைக ளில் உணர்ச்சிகளின் வெளிப்பாட்டினை வலியுறுத்தினார். இது மனப்பதிவு வாதிகளுக்கு மேலும் வலுச்சேர்த்தது. மனப்பதிவு வாதமே கட்புலக் காட்சியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. ஓவியம் அழகுணர்ச்சியிலிருந்து வாசிப்பிற்குரியதாக மாறியது.

## வெளிப்பாட்டு வாதம் (Expressionism)

மனப்பதிவு வாதத்திலிருந்து சில மாறுதல்களுடன் வெளிப்பாட்டு வாதம் உருவாகியது. **ஓவியத்தின் பணி புற உலகின் தோற்றத்தினை வெறு மனே பிரதி செய்தலோ மெய்யான நிகழ்ச்சிகளை பிரதிபலிப்பதோ அல்ல. காட்சிப் புலத்தின் எல்லைகளுக் கப்பால் உள்ளடங்கியிருப்பனவற்றை வெளிக் கொணர்தல்** என வெளிப்பாட்டு வாதிகள் அறிக்கை வெளியிட்டனர்.

கட்புலனால் அறியப்பட்டதை பிரதி யுருச் செய்யாது முற்றிலும் புதியதொரு கட்புலத் தோற்றத்தை இவர்கள் வேண்டி நின்றனர். அதாவது ஓவியத் தின் ஆட்சிப் பரப்பை அதன் வழக்கமான எல்லைகளுக்கப்பால் கொண்டு சென்றனர். **"ஓவியர்கள் இயற்கையைக் கூடியளவிற்கு ஒத்ததாகவோ அல்லது அதனைப் பின்பற்றியோ படைக்கக் கூடாது எனவும் ஓவியர்கள் சூழலை ஆராய்வதிலும் பார்க்க தம்மைத் தாமே ஆழமாக ஆராய்தல் வேண்டும்"** என வெளிப்பாட்டு வாதியான கோகான் தெரிவித்தார்.

ஓவியன் தனது அனுபவத்து டன் உணர்ச்சி கலந்து கலைப் படைப்புக்களை உருவாக்க வேண்டும் எனவும் வெளிப்பாட்டு வாதிகள் வலியு றுத்தினர். இவர்களின் ஆக்கங்களில் தன்னுருவ ஓவியங்கள் குறிப்பிடத்தக் கன. **வான்கா, கோகான்** ஆகியோர் தம் உணர்வு கலந்து தன்னுருவ ஓவியங் களை வரைந்தனர். வான்கா நிலக் காட்சிகளை வரையும் போது வளமிக்க இயற்கையைப் பிரதிபலிக்காது உள நிலைமையைப் பிரதிபலித்திருப்பதை இங்கு கூற முடியும். மேலும் **"கனவில் நடப்பவனைப் போல யாதும் அறியாத நிலையில் நான் வேலை செய்கிறேன். வாழ்க்கைக் கோலம் பற்றிய எமது நாகரிகமடைந்த மக்களின் மனப்பதி விலிருந்து முற்றிலும் வேறுபட்ட தொன்றினையே எனது ஓவியங்கள் தரமுயலுகின்றன."** எனும் வான்காவின் கூற்றும் வெளிப்பாட்டு வாதத்தின் தத்து வமாக இங்கு நோக்கத் தக்கதாகும்.



[stamp]

கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டதனாலேயே நவீன ஓவியன் மரபுவழியான உருவமைப்பிலிருந்து விடுபடும் சுயாதீனத்தைப் பெறுகின்றான். உருவமில்லா உருவத்தினால் கலைஞன் தன் அகநிலை உணர்வுகளை வெளியிடுகின்றான். என வெளிப்பாட்டு வாதிகள் கூறுகின்றனர்.

**கீர்க்நெர், டிராட்லூப், நொல்டீ, கன்டின்ஸ்கி, கூமின்** போன்றோர்களும் வெளிப்பாட்டு வாதத்தில் பலவேறு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

## தற்குறிப்பேற்றக் கலை (Futurism)

**20ம் நூற்றாண்டுக்குரிய வாழ்வின் வன்முறைப் போக்குகளை கலைஞர்கள் தமது படைப்புகளில் கொண்டு வர வேண்டும்" எனும் கவிஞர் மொறிநெற்றி** அவர்களின் அறிக்கை இவ் ஓவியப் பாணிக்கு வித்திட்டது.

தொழிநுட்ப விடயங்கள் தரும் தூண்டுதலைக் கொண்டே இவர்கள் படைப்புக்களை உருவாக்கினர். படைப்புக்களின் கருப்பொருள்களாக விரைந்து இயங்கிக் கொண்டிருக்கும் நகர் தரும் அனுபவங்கள் இருந்தன. காட்சிகளின் பல்வேறு விம்பங்களும் ஒரே கன்வசில் வரையப்படும் முறை தற்குறிப்பேற்ற வாதிகளால் அறிமுகப் படுத்தப்பட்டது. ஓவிய வெளிப்பாட்டிற்கு மேலதிக அழுத் தம் தர ஓவியங்களில் சொற்கள் பயன் படுத்தும் முறையும் இங்கு கொண்டு வரப்பட்டது.

தற்குறிப்பேற்ற வாதிகள் தமது கலைக் கொள்கை இயக்கவியற் தன்மை கொண்டது எனவும் அது உள்ளுணர்வை முதன்மைப்படுத்தி புலனனுபவத்திலிருந்து பெறப்படுவதை அழுத்தமாகத் தருவதாகும் எனக் கூறினர். செந்நெறி சார்ந்த சிற்பங்களின் அழகை விட **ரேசிங் கார் (Razing car)** அழகானது என வலியுறுத்தினர்

பொருளின் இயக்கத்தின் போது ஏற்படும் அசைவை ஓவியம் பதிவாக்கியது. பொருளின் அசைவு முறிந்த கோடுகளினால் எடுத்துக் காட்டப்பட்டது. நேரம், அசைவு என்பவற்றில் இவர்களால் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளப்பட்டது. பொருளை நன்கு ஆராய்ந்து, அதிலிருந்து பெறும் முழு அனுபவத்தையும் குறியீட்டினூடாக கேட்பதை, தொட்டுணர்வதை நினைவில் நிற்பதை எல்லாமே இணைத்து ஓவியத்திற்குள் கொண்டு வந்தனர்.

மனப்பதிவு வாதியான **ஜோர்ஜ் செரட்** என்பவர் ஓவியத்தில் நுட்பத்தைக் கொண்டு வருவதற்கு பல பரிசோதனைகளைச் செய்தார். நிறப் புள்ளிகளைக் கொண்டு வர்ணங்களை கண்பார்வையால் கலந்துணரச் செய்தார். இந்த நுட்பத்தின் வளர்ச்சியினை தற்குறிப்பேற்றக் கலையின் வடிவமைப்பாகக் குறிப்பிடலாம்.

தற்குறிப்பேற்ற ஓவியர்கள் வரிசையில் **கார்லோ, காரா, போசியோனி, பல்லோ** போன்றவர்களைக் குறிப்பிடமுடியும்.

## டாடாயிஸம் (Dadaism)

**ரிசாரா, கல்சர்பேக்** எனும் இருவரும் மரபுக்கு எதிரானதாக இதனைத் தோற்றுவித்தனர். இக்கோட்பாடு **சர்ரியலிஸத்தின்** அடிப்படை என அழைக்கப்படுகின்றது. **டாடாயிஸத்தை** ஜேர்மனியில் குழந்தைகளின் பிதற்றல் எனவும் பிரான்ஸில் பொழுது போக்குக் குதிரை எனவும் அழைக்கின்றனர்.

20ம் நூற்றாண்டின் போக்குகளை அதிகம் உள்ளடக்கி அமைவதால் 20ம் நூற்றாண்டின் கலையாக இது பார்க்கப்படுகின்றது. டாடாயிஸ ஓவியர்கள், தமது காலத்தை விளக்குவதற்கு இக்காலத்தில் தயார் நிலையிலிருந்த (Ready–made) பொருட்களை நாடிச் சென்றனர். சாதாரணமாகச் சூழலில் காணப்படும் பொருட்களைக் கொண்டு கலையுருவாக்கம் செய்தனர்.

ஏற்கனவே இருந்ததை மாற்றுதல் என்பதற்கிணங்க **லியனாடோ டாவின்ஸியின் மோனலிஸாவிற்கு மீசை, தாடி வைத்து மாற்றியமைத்து L.H.O.O.Q எனத்தலைப்பிட்டு, மோனலிஸா: பெண்ணின் ஆளுமைக்குப் பின் மறைந்து நிற்கும் அதிசயங்கள்** என்கின்றனர். **மக்ஸ் எர்னாட்ஸ், ஜீன் ஆர்ப்** போன்றோரையும் இவ்வோவியப் பாணிக்கு உதாரணமாகக் கூறலாம்.

## போவிசம் (Purism)

**'நவீன ஓவியம்'** என்ற கருத்தின் உள்ளார்ந்த அர்த்தத்தில் மரபுக்கெதிரான புரட்சியில் ஈடுபட்டவர்களே **"போவிஸ்ட்"** என அழைக்கப்பட்டனர். இவ்வோவிய மரபின் முன்னோடி **ஹென்றி மாட்டிஸே** ஆவார். **ஆந்திரே டேரான், றொனால்ட், பிராக்சர், மார்க், வலமின்ட்** ஆகியோரும் இவ்வழியில் ஈடுபட்டனர்.

**"அதிகாரத்தை நான் வெறுக்கிறேன். கலைப்பாணியைப் பற்றிக் கவலைப்படாது எனது நெஞ்சத்தால் வரைகிறேன்."** என **வலமின்ட்** கூறுவதிலிருந்து **போவிஸ்டுகள்** உள்ளுணர்வை மனம் போன போக்கில் வெளிப்படுத்தினர் எனலாம். இதனால் **போவிஸ்டுகளை காட்டு விலங்குகள்** எனவும் அழைக்கின்றனர்.

## கியுபிசம் ( Cubism)

**முற்றிலும் புதியதொரு வழியில் உலகைப் பிரதிபலிப்பதே கியூபிசம்" என யுஆன்கிறீ** குறிப்பிடுகின்றார். **பிக்காசோ, பிராக்ஸர்** ஆகிய இருவரையும் சார்ந்து இயங்கிய ஓவியக் குழுவான **கியூபிசம், ஓவியம் காட்சிக்கு மட்டும் உரியதல்ல அது கருத்துக்கும் உரியது** என வற்புறுத்தியது.

ஓவியத்தில் பல்வேறு கோலங்கள் கொண்டுவரப்பட்டதுடன் வர்ணப் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டது. நீலம், சாம்பல், மாநிறம் என்பனவே அதிகம் பயன்படுத்தப்பட்ட நிறங்களாகும். பத்திரிகைகள், அலங்காரங்கள் என்பவற்றை வெட்டி ஒட்டி ஓவியத்தின் மேற்பரப்பு உருவாக்கப்பட்டது. முப்பரிமாணம் ஓவியத்தில் கொண்டுவரப்பட்டது.

Cone, cube, cylinder, sphere போன்ற வடிவுகளைக் கொண்டு ஓவிய உருவம் தொகுக்கப்பட்டது. இயற்கைக் காட்சிகள் கூட இவ்வகையான வடிவங்களுக்கூடாகவே வெளிப்படுத்தப்பட்டது. இயற்கையின் முழுத் தொகுதியும் ஒரேயடியாகக் கொண்டுவரப்பட்டது. கியூபிச ஓவியர்கள் தமது ஓவியங்களில் கேத்திர கணித உருவங்களைப் பயன்படுத்துவதற்காக கணிதவியலாளர்களுடன் தொடர்புகளை வைத்திருந்தனர்.

## மீமெய்யியம் (Surrealism)

ஓவியங்கள் கனவு நிலை வருணணைகளாகயிருந்தன. பழக்கப்பட்ட வழிவந்த ஓவிய ரசனையையும் சிந்தனையையும் **சர்ரியலிஸம்** உலுப்பியது. அகமுக நோக்கு வலியுறுத்தப்பட்டது. **பிராய்ட்டின்** உளவியற் சிந்தனைகளும் இதற்கு ஆதாரமாயின. ஓவியங்களில் அகவுணர்வை வெளிப்படுத்திய **சல்வடோர் டாலி 'ஓவியத்தின் பிராய்ட்'** என அழைக்கப்பட்டார். இவரின் வழிந்தொழுகும் கடிகாரங்கள் எனும் ஓவியம் இதற்கு அத்தாட்சியாகும்.

**'மனிதனே விழித்தெழு சர்ரியலிஸம் என்ற ஒழுக்கம் உனக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் வியப்புக்குரிய புத்தார்வச் சுவையை நீ கண்டு கொள்ளலாம்** என அரகான் தெரிவித்தார். இவர்களுடன் பெரிட்டான், எலுவாட், மாஹ், ஏனெஸ்ட் போன்றோரையும் இவ் ஓவிய மரபின் ஓவியர்களாகக் கொள்ள முடியும்.

## அரூப ஓவியங்கள் (Abstract Art)

பொருளின் புறத் தோற்றத்தை ஓவியமாக வரைதல் என்ற கோட்பாடு கைவிடப்பட்டது. தனியன்களை விடுத்து பொதுமைகளைத் தேடும் முயற்சியில் ஓவியர்கள் ஈடுபட்டனர். பொருள் நிலை உலகின் மாதிரிகள் நிராகரிக்கப்பட்டு கருத்துருவ வடிவங்களைத் தேடும் முயற்சியில் ஓவியர்கள் ஈடுபடலாயினர். கடந்த காலத்தில் **ஓவியர்களால் பின்பற்றப்பட்ட கூறுகள் பலவற்றை நிராகரித்த புதிய முறையிலான வெளிப்பாடுகளே அரூப ஓவியங்களாகும்.**

இவ் ஓவிய மரபின் முதன்மை பெற்றவராக **கண்டின்ஸ்கி** காணப்படுகின்றார். அத்தோடு **பிக்காசோ, பிராக்சர்** போன்றோரையும் குறிப்பிடலாம். **"தன் மன உணர்ச்சியை அரூபமாக வெளிப்படுத்தவே ஓவியன் முயற்சிக்கிறான்"** என **மொன்றின்** குறிப்பிடுகின்றார். தற்கால அரூப ஓவியர்கள் வட்டம், சதுரம், போன்ற கோல வடிவங்களைப் பயன் படுத்தி பிரக்ஞை பூர்வமாக உளத்திருந் தெழும் அரூப வடிவங்களை வெளிப்படுத்தினர்.

## முடிவுரை

நவீனம் ஓவியத்தில் மிகுந்த மாற்றத்தை ஏற்படுத்தி காட்சிக் கலையை கருத்துக் கலையாக மாற்றியிருக்கிறது. உருவச் சிதைவு, அகவெளிப்பாடு, உணர்ச்சித் தீவிரம் போன்றனவற்றின் ஊடாக, நவீனம் ஓவியத்தினை அழகுணர்ச்சியை விட வாசிப்பதற்குரிய ஒன்றாக மாற்றியிருக்கின்றதெனலாம்.

**- முற்றும் -**

# கிழக்கிலங்கை மக்களின் பண்பாட்டுப் முறைமை பற்றிய தேடல்

செ. எதிர்மன்ன சிங்கம்.
முன்னாள் உதவிப் பணிப்பாளர்
கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சு.

கிழக்கு இலங்கை என்னும் போது திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாநிலங்களையும் கொண்ட பிரதேசமாகும். இம் மாநிலங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களது பாரம்பரியம், சடங்குகள் பற்றிய தேடலாகவே இக் கட்டுரை அமையும்.

மகாவலி கங்கையின் ஒரு கிளைநதியாக வெருகல் கங்கைப் பேராறு தொடக்கம் தெற்கே குமுக்கன் ஆறு வரையும் பரந்து நீண்டும் கிடக்கும் இம் மாநிலங்களின் தனிப் பண்பட்ட பண்பாட்டுப் பாரம்பரியம் தனித்துவம் பொருந்தியதாக விளங்குகின்றது. சுமார் நூற்று முப்பது மையில் நீண்டு கிழக்கு மேற்காக முறையே நெய்தலும், மருதமும், முல்லையும், குறிஞ்சியும் அணிபெற அமைந்து எழுபது மைல் அகன்று கிடக்கும் இம் மாநிலப் பாரம்பரியம் மிகச் சிறப்பு மிக்கதாகும். இதன் கண் **சேரநாட்டுப் பண்பாடு, இந்துசமயப் பண்பாடு, சமயசமரசப் பண்பாடு, சாதிப்பண்பாடு, ஒழுக்க முறைப் பண்பாடு. நாட்டுப் பாடல் பண்பாடு, வடசேரி, தென்சேரிப் பண்பாடு, சமூக பொருளாதார, சட்டதிட்ட, கலை, கலாசார, மொழி இலக்கியப் பண்பாடுகள்** எனப் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட வேண்டியவையாகும்.

இப் பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கு தமிழ்நாட்டுத்தமிழர், யாழ்ப்பாணத் தமிழர், தொடர்புகளும், இஸ்லாமியர், சிங்களவர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் தொடர்புகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. கோணேசர் கல்வெட்டு, வீரமுனைச் செப்பேடு, முக்குவர் ஏற்பாடு மாகோன் ஏற்பாடு, கண்டியரசன் ஏற்பாடு, தேசவழமைப் பத்திகள், கோணேசர் அந்தாதி, மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு தமிழகம், வசந்தன் கவித்திரட்டு, மாகோன் வரலாறு, குளக்கோட்டன் தரிசனம், மாநில உபகதைகள், கண்ணகி வழக்குரை, எண்ணெய்ச் சிந்து ஆகியவை எமக்குத் துணை புரிகின்றன.

சமூகப் பண்பாட்டிலே பிறப்புத் தொடக்கம் இறப்பு வரை பல தனித்துவமான பண்பாடுகள் உள்ளன. வருடந் தோறும் படிக்கப்பட்டு வரும் **எண்ணெய்ச்சிந்து கண்ணகி காவியம்** முதலியவற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம். சாதிப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பூரணமாக அறிந்து கொள்வதற்கு **குலக்கல்வெட்டு, பெரிய கல்வெட்டு, பங்கு கூறும் கல்வெட்டு, சீர்பாதகுல வரலாறு, முக்குவர் வன்னிமை, திருப்படைக்**

**களஞ்சியம்,** முதலானவை எமக்கு உதவுகின்றன.

சமயப் பண்பாடு தொடர்பாகப் பார்க்கும் போது **கண்ணகி வழிபாடு, வதனமார் வழிபாடு, முருக வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு ஆகியவற்றுடன் சமயச் சடங்குகளான சர்க்கரை அமுது, தண்ணிச் சோற்றப் பள்ளையம், வயிரவர் மடை** (பயிரவர் சடங்கு) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அத்தோடு இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த, பொதுமத வழிபாடுகளிலும், நமது பண்பாட்டுப் பாரம்பரியம், எந்தளவு பாதிப்பினை ஏற்படுத்தியுள் ளது என்பதையும் கண்டு கொள்ளலாம். சமய சமரச மனப்பான்மை உள்ளவர்களாக இருப்பதற்குக் காரணம் வேதாந்த வழி முறைகளைக் கொண்ட **ஸ்ரீ இராமக் கிருஷ்ண** போதனையே எனக்கருதலாம்.

ஒழுக்க முறைப் பண்பாட்டிலே **சாதி சமயப் பழக்கவழக்கங்கள், தனித்துவ அனுட்டானங்கள்** என்பன அடங்குகின்றன. எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தில் **சகுனம் பார்த்தல், சாஸ்திரம் கேட்டல், கண்ணூறு கழித்தல்** என்பன சிறப்பிடம் பெறுகின்றன. **சோதிடம், மாந்திரீகம், வசியம், வைத்தியம், மனையடி சாஸ்திரம்** நமது பண்பாட்டுப்பாரம்பரியங்களுக்கென சில வரையறைகளைத் தருகின்றன.

திருமண வீட்டில் மாப்பிள்ளைகளுக்குக் கொடுக்கும் சீதன முறைகள் ஏனையநாட்டுப் பாரம்பரியங்களிலிருந்து முற்றும் வேறானது. பெண்ணுக்குத் தனியாக அன்றி மாப்பிள்ளைக்கும் சேர்த்தே சீதனம் கொடுக்கப்படுகின்றது. பிள்ளைகள் இல்லாமல் மனைவி இறந்தால் சீதனம் முழுவதும் கணவனுக்கும், பிள்ளைகளைப் பெற்று மனைவி இறந்தால் சீதனச் சொத்துப் பிள்ளைகளுக்கும் சேரும். கணவனும், மனைவியும் திருமணமுறிவு (Diverse) ஏற்படும் போது சீதனச் சொத்து இரண்டாகப் பிரிபடுகின்றது. ஒரு திருமணத்தை நடத்தி முடித்தால் பெண்'வீட்டாரே மகளுக்கு வீடு, வளவு, தோட்டம், துரவு முதலியவற்றைக் கொடுப்பதோடு மாப்பிள்ளையைச் சீதன வீட்டிலேயே வைத்துக் கொண்டு ஆறுமாதம் சோறு கொடுக்கும் (சாப்பாடு) வழக்கம் உண்டு. தமிழ் நாட்டில் திருமணம் முடிந்ததும் மணமகள் மாப்பிள்ளை வீட்டுக்குச் செல்லும் முறை வழக்கத்தில் உண்டு. சில சந்தர்ப்பங்களில் வீட்டோடு மாப்பிள்ளையாக பெண்வீட்டில் இருப்பதும் தமிழ் நாட்டில் நடைமுறையில் உள்ளது. தாய்மாமன் மகனை (அத்தான்) திருமணம் செய்யும் முறையே எமது பாரம்பரியத்தில் உள்ளது. தமிழ் நாட்டில் தாய்மாமனைக் கட்டுவதும் தாய்மாமனுடைய மகனை அத்தானைக் கட்டும் இரு வழக்கங்களும் உள்ளன.

மேலும் முதற் பிரசவத்தைப் பெண்வீட்டாரே தமது செலவில் பார்த்தலும், சீதனக் காணியை முதல் முதலில் விதைத்து அறுவடை செய்து கொடுத்தலும் இங்குள்ள தனிப்பட்ட

பண்பாட்டுப் பாரம்பரியமாகும். இது முக்குக வழமைகளில் மிகவும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. இப் பாரம்பரியம் இங்கு வாழ்கின்ற முஸ்லிம் சகோதரர்களிடம் உள்ளது. மருமகள் கர்பிணியாக இருக்கும் போது மாமியார் வீட்டார், மச்சாள்மார் கர்ப்பிணிப் பெண்ணுக்கு கொழுக்கட்டை கொண்டு போகும் மரபு வழிப் பாரம்மபரியமும், ஆண்குழந்தை பிறக்கும் போது வீட்டிற்கு மேலாக உலக்கை எறிதலும், பெண்குழந்தைக்கு ஈர்க்கிள் கட்டு (விளக்குமாறு) எறியும் பாரம்பரியத்தையும் நாம் கொண்டுள்ளோம்.

**கண்ணூறு, நாவூறு, காத்தணவு** பார்க்கும் மரபுவழிப் பாரம்பரியம் இன்றும் நமது தாய்மாரிடம் உண்டு. குழந்தைகளை மாலை நேரத்தில் வெளியில் கொண்டு செல்ல மாட்டார்கள். பட்சிகள் எச்சங்கள் படலாம் என்றும், பேய், பிசாசுகளின் பார்வை ஏற்படலாம் என்பதற்காகவும் கரித் துண்டு ஒன்றினை கொண்டு செல்வார்கள். குதிரை லாடம் போன்ற இரும்பினைக் காய்ச்சி நீரிலே அதனைத் தோய்க்கும் போது அந்த நீர் குழந்தையின் முகத்தில் சீறியடிக்கும் போது ஏற்படும் உணர்வு, அல்லது ஒலியினால் அந்தக் கண்ணூறு மாறும் என்றும் நம்புகின்றனர். இதற்காக இரும்பினை அடுப்பிற்குள் போடும் போது கண் **சிரட்டை, செங்கல் துண்டு, மண் அல்லது முற்சந்தி மண் முக்கூரை வைக்கோல், காய்ந்த மிளகாய், உப்புக்கல்** என்பன வற்றையும் சேர்த்துப் போடுவர். கண்ணூறு, நாவூறு எற்படாமல் இருக்க குழந்தையின் முகத்தில் சிறியதொரு கறுத்தப் பொட்டு வைக்கப்படும். அதற்கும் மிஞ்சிக் கண்ணூறு ஏற்பட்டு விட்டால் திருநீறு (துண்ணூறு ஓதிக் கொடுத்தல்) அல்லது தண்ணீர் ஓதி மந்திரித்துக் கொடுக்கும் வழக்கமும் உண்டு.

முக்குவ மரபில் பெண் குழந்தை பிறந்ததும் தாய்க்கு ஒத்தாசை செய்வதற்கு முறை மச்சாளே வருவாள். குழந்தையைக் குளிப்பாட்டி சாணை கூறை (சாணைச்சீலை) போடும் போது "இவளுக்கு (பெண்குழந்தை) எனது சின்ன மகன் தான் மாப்பிள்ளை" எனக் கூறி **'சாணைக்குறி'** போடும் வழக்கம் உள்ளது பிள்ளை வளர்ந்து பெரியவர்களாகியதும். (பூப்படைந்ததும்) முதன் முதலில் முறைமச்சாளுக்கே சொல்லி அனுப்பப் படும். பின்னர் அவளும் தாயும் கலந்து ஆலோசித்து உறவினர்க்கு சொல்லி அனுப்புவர். தண்ணிவார்க்கும் போது முதலாவதாக தண்ணீர் ஊற்றும் உரிமை முறைமச்சாளுக்கே உண்டு.

-தொடரும்-

"கதிரவன்" வெளிவர உதவும் அனைவருக்கும் கதிரவன் கலைக்கழக்கத்தின் நன்றிகள்.



உருளும் கல்லில் பாசி பிடிக்காது.


# யுனிக்கோட் தவறவிட்ட தமிழ் எழுத்துக்கள்

ஆரம்ப வகுப்பில் படிக்கும் பிள்ளை ஒன்று பாடப்புத்தகத்தில் **ஒ ள வை யா ர்** என்று வாசிக்கும் போது நம்மில் எத்தனையோ பேர் அதனைத் திருத்தி அது அப்படி இல்லை அது **"அவ்வையார்"** என்று சொல்லிக் கொடுத்திருப்போம். ஆனால் அத்தருணம் நாம் பிழை விட்டிருக்கிறோம். என இவ்வாசிப்பின் முடிவில் நீங்கள் உங்களையே வினாவிக் கொண்டால் அதுவே எனது எழுத்திற்குக் கிடைத்த வெற்றியாய் நான் எடுத்துக் கொள்கின்றேன்.

என்ன தலைப்பு இது? யுனிக்கோட் தவறவிட்ட தமிழ் எழுத்துக்களா? என்று என்னை நீங்கள் ஒரு விதமாய் பார்ப்பதையும் என்னால் உணர முடிகின்றது!

முதலாவதாக......**"ஒ"** வுக்குப் பக்கத்தில் **"ள"** எழுத்தைப் போட்டு **"அவ்"** என்று பாவிக்கிறார்கள். உண்மையிலே தமிழில் ஒரு உயிரெழுத்துக்குக் பக்கத்தில் இன்னொரு உயிர்மெய் எழுத்துச் சேர்த்து ஒரு தனி ஒலி வடிவம் கொண்ட எழுத்து தோன்றுவதாய் அல்லது இருப்பதாக இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. அவ்வாறு கண்டு பிடிப்பதற்கான அவசியமும் தமிழில் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை. அவ்வாறிருக்க **"ஒ"** வுக்குப் பக்கத்தில் **"ள"** அச்சிடப்பட்டிருக்கும் போது பிள்ளை எப்படி அவ்வையார் என்று வாசிக்க முடியும்? அது **ஒ ள வை யா ர்** என்று வாசிப்பதில் தப்பேதும் இருப்பதாய் தோன்றவில்லை. அப்படியானால் இலக்கணப் போலியுடன் எழுதும் **"அவ்வையார்"** எனும் சொல்லைத் தமிழில் எப்படி எழுதுவது? என்ற அடுத்த வினாவை நீங்கள் கேட்க இடமளிக்காமலேயே விளக்கம் தரவேண்டியது இந்த இடத்தில் எனது கடமையாகிறது.

**"க"** எழுத்தின் ஓசையை **"ா"** எனும் தமிழ் குறியீடு எப்படி நெடிலாக்குகின்றதோ அதே போன்றதொரு இன்னுமொரு குறியீடே **ஒ** எனும் எழுத்தின் ஓசையை **"அவ்"** என்று மாற்றிய மைக்கிறது. அந்தக் குறியீடுதான் சிலருக்கு மட்டும் தெரிந்த பலருக்குத் தெரியாத **"வெள்ளிக்கால்"** எனும் குறியீடு இனி வெள்ளிக்காலை எழுதுவது எப்படி எனப் பார்ப்போம்! **"ா"** போன்றே வெள்ளிக் காலும் தனித்து ஓசை தராத ஒரு குறியீடாகும் இது **"ள"** போன்று **"ஒ"** வின் உயரத்தில் பாதி உயரமுடையதாக எழுத வேண்டும்.




ஒளவையார் X

ஔவையார் ✓

ஆக தமிழில் இல்லாத **"ஒள"** என்னும் (தமிழ்) எழுத்து, பாடப்புத்தகம் அச்சிடும் அச்சகத் தட்டெழுத்து செய்பவருக்குத் தெரிந்திரா விடினும் அதைச் செம்மை பார்த்துப் பதிப்பிக்கும் தமிழ் அறிஞர்கள் கவனித்திருந்தால் அல்லது தமிழ் அரிச்சுவடி கற்பிக்கும் ஆசிரியர்கள் கவனித் திருந் தால் . இந் நிலையை



அறிவாளிகள் வெளிப்பார்வைக்குப் பிரகாசிப்பதில்லை

மாற்றியிருக்கலாம். இவ்விடத்தில்தான் பாரதி சொன்ன **"மெல்லத் தமிழ் இனிச் சாகும்"** என்ற வரிகள் உயிர் பெறுவதாய் எனக்குள் ஓர் உணர்வு. அது அவ்வாறிருக்க அந்த வரிகளை வலுவிளக்கச் செய்ய தமிழ் இணையங்கள் பங்களிக்கின்றன. எனும் கருத்து உங்களுக்கு வருவது போன்று எனக்கும் வந்தது.

இது வரை காலமும் ஓவியமாய் ஒளிர்ந்த தமிழ் எழுத்து வடிவங்கள் இன்று இணையத்தில் 'யுனிக்கோட்' என்று தமிழைத் தமிழாய் எழுதும் நிலைக்கு மாற்றமடைந்தன. எழுத்துருவில் தட்டச்சுச் செய்யும் போது **ள** வின் பருமனை மாற்றியமைப்பதன் மூலமாக ஓரளவு அவ் உச்சரிப்பை பெறக்கூடியதாய் இருந்த தமிழ், யுனிக்கோட் முறையில் அந்த வாய்ப்பையும் இழந்து தவிக்கிறது. இது எனக்கு கவலை அழிக்கிறது? உங்களுக்கு? மீண்டும் வெள்ளிக்காலை வென்றெடுக்கலாமா? வினவிப் பார்க்கிறேன்? விடை!! நிச்சயமாக என் கையில் இல்லை என்பதே விடை! யுனிக்கோட் தவறவிட்ட இன்னுமொரு எழுத்தும் உள்ளது விரிவஞ்சியும் தெளிவுடன் காட்டவும் குறியீட்டில் தருகிறேன் புரிந்துகொள்ளுங்கள்.

**ற் + இ = றி**
**ர் + இ = ரி**

**? + இ = ரி**

தமிழில் குறியீடு ஒன்றுடன் (அதாவது அரவுடன்) உயிர் சேர்த்து ஒரு எழுத்து உருவாவதில்லை. இதுவும் **யுனிக்கோட் தவறவிட்ட தமிழ் எழுத்து!** ஆனால் இன்று இணையத்தமிழில் ஆதிக்கம் காட்டும் தமிழ் இல்லாத தமிழெழுத்து. இவைகள் எதிர்காலத்தில் யுனிக்கோட் முறையில் மாற்றப்படுமா என்ற வினாவுடனும் மாற்றப்படவேண்டும் என்று ஆதங்கத்துடனும்

**- ச.மதன் -**

## இவர்கள் என் பார்வையில் இப்படி.....

**மாமி**
மாப்பிள்ளை
தேர்ந்தெடுக்கும் மெசின்

**மாமா**
அப்பாவியாய் நடமாடும்
முகமூடி போட்ட
கொள்ளைக்காரன்

**மச்சான்**
குல தெய்வக்
கோயிலின் உண்டியல்

**நண்பன்**
சம்பளம் இல்லாத
தபால்காரன்

**என்னவள்**
தாவுதலில்
குரங்கையும் வென்றவள்

**என்னவளின் தங்கை**
என்னவளுக்கே . . .
ஆப்படிக்கக் காத்திருக்கும் கூனி.

**தங்க. யுவன்**

# செய்திக் கதிர்

சமகால நிகழ்வுகள், கலை கலாசார விழாக்கள், மக்கள் மேம்பாட்டுக் கருத்துக்கள், அபிவிருத்தித் திட்டங்கள், விழிப்புணர்வு செயற்பாடுகள் அனைத்தையும் கதிரவனின் "செய்திக்கதிர்" பகுதிக்கு அனுப்பி வையுங்கள்.

## உமா வரதராஜன் கதைகள்

கல்முனை கலை இலக்கிய நண்பர்களின் ஏற்பாட்டில் 17.03.2012 சனி பி.ப 03.45 மணிக்கு கல்முனை கிறிஸ்தவ இல்ல மண்டபத்தில் உமா வரதராஜன் கதைகள் நூல் அறிமுகம் கமலாம்பிகை லோகிதராஜா அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. அருட் சகோதரர் முனைவர் எஸ்.ஏ.ஐ.மத்யூ அவர்களினால் வெளியிடப்பட்ட நூலினை மா.கனகசுந்தரம் அவர்கள் பெற்றுக்கொண்டார். கலாநிதி எம்.ஏ.நுஃமான், எஸ்.எல்.எம்.ஹனீபா, மன்சூர், ஏ.காதர், சோலைக்கிளி, றமீஸ் அப்துல்லாஹ், எம்.கே.எம்.மன்சூர், எஸ். அரசரெத்தினம், த.மலர்ச்செல்வன், நமீல், மலராஅனார், அலறி, நி.உருத்திரா, றூக் சந்திரிக்கா சுரேஷ், உமாவரதராஜன், ஆகியோரின் சிறப்புரைகளுடன் நிகழ்வு நிறைவுற்றது.

## பொங்கல் விழா - 2012 -

இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களமும், இலங்கை சமுர்த்தி அதிகார சபையும், மட்டக்களப்பு மாவட்ட செயலகமும், இணைந்து நடத்திய பொங்கல் விழா களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் 22.01.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு இடம் பெற்றது. நிகழ்வுகளில் பொங்கல் நிகழ்வினைத் தொடர்ந்து களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய நிருவாகச்சபைத் தலைவர் திரு.க.பாஸ்கரன் அவர்களின், வரவேற்புரையும், ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சந்திரானந்தக் குருக்கள் அவர்களின் சிறப்புச்சொற்பொழிவும் திருஞான சம்பந்த குருகுல மாணவர்களின் பண்ணிசையும், அரசாங்க அதிபர் திரு.சுந்தரம் அருமைநாயகம் அவர்களின் தலைமையுரையும் இடம்பெற்றது.

தொடர்ந்து நாவற்குடா - இந்துகலாசார நிலைய மாணவிகளின் வரவேற்பு நடனம், குருக்கள் மடம் ஸ்ரீ முருகன் சிவநெறிமன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் காவடியாட்டம், தேற்றாத்தீவு, தேனுஜா கலைக் கழகத்தின் வசந்தன் கூத்து, முனைக்காடு நாகசக்தி கழகத்தின் அனுமாராட்டம், தேனுஜா கலைக் கழகத்தின் குறவன் குறத்தி நடனம், அர்த்தநாரீஸ்வரர் அறநெறிப் பாடசாலை மாணவிகளின் தனி நடனம், குருக்கள் மடம் ஸ்ரீ முருகன், சிவநெறிமன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கோலாட்டம், பட்டிருப்பு தேசிய பாடசாலை மாணவர்களின் நடனம், தேனுஜா கலைக் கழகத்தின் கிராமியப் பாடல், களுதாவளை இ.கி



அறிவுசாலி வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வான்.

மகாவித்தியாலய மாணவர்களின் செம்பு நடனம், செல்வி ம.தனுஜாவின் கண்ணன் பாடல், செல்வி.நே.ஹம்சத்வனியின் நடனம், அர்த்தநாரீஸ்வரர் அறநெறிப் பாடசாலை மாணவிகளின் உழவர் நடனம். கதிரவன் கலைக் கழகத்தின் கும்மியாட்டம், வவுணதீவு மக்களின் "அயோத்தி மன்னன்" கூத்து, ஆகிய கலை நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றதுடன் **"பொங்கலிட்டு துதிசெய்வோம்."** எனும் தலைப்பில் கவியரங்கம் ஒன்றும் இடம்பெற்றது. இக் கவியரங்கில் தலமைக் கவிஞராக கலாபூசணம் தேனூரான் அவர்களும் கவிபாடும் கவிஞர்களாக பி.ரிகரன், இரா.நல்லையா, வே.ஆ.புட்கரன். ஆகியோரும் பங்கு பற்றினர். நிகழ்வு சமுர்த்தி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் அவர்களின் நன்றியுடன் இனிதே நிறைவுற்றது.

## நற்றிணையில் வாழ்வியல் விழுப்பங்கள் - கருத்தாடற்களம்

மட்டக்களப்புத் தமிழ் சங்கத்தின் தமிழ் இலக்கிய நயம் மட்/முறக்கொட்டான் சேனை இ.கி.மி.வித்தியாலயத்தில் 2012.02.25 ஆந் திகதி சனிக்கிழமை மு.ப.9.30 மணிக்கு மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் திரு.மு.தவராசா B.A (ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. **"நற்றிணையில் வாழ்வியல் விழுப்பங்கள்"** எனும் தலைப்பில் கருத்துரையினை வை.இ.எஸ். சிவசிறி காந்தன் குருக்கள் அவர்கள் சிறப்பாக நிகழ்த்தினார்.


## கதிரவன் சந்தா விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| **ஓராண்டு சந்தா** | 300/- | US$ 20 |
| **ஆயுள் சந்தா** | 4000/- | US$ 100 |

**ஆயுள் சந்தா செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "கதிரவன்" வழங்கப்படுவதுடன் கதிரவனால் வெளியிடப்படும் ஏனைய புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படும்.**

**விளம்பரக்கட்டணம் : நேரில் / தொலைபேசியில் உரையாடி தீர்மானிக்கப்படும்.**

அன்பளிப்பு

**இலங்கை வங்கி (காத்தான்குடி) கணக்கு இல:- 8725117**

**கதிரவன் கலைக்கழகம் (சேமிப்புக்கணக்கு)**

---

**காசுக்கட்டளை : உபஅஞ்சல் அலுவலகம், புதுக்குடியிருப்பு E-P**

**த.இன்பராசா எனப் பெயரிடுக.**




**குறிக்கோள் வெற்றிக்கு உந்து சக்தியாகும்.**

# வாசகர் கதிர்

க.சபாரெத்தினம்- ஆரையம்பதி -

பிரபஞ்சத்தின் மூலாதாரம் கதிரவன். அவனின்றி இவ்வுலகில்லை.கதிரவன் கலைக் கழகம் அக்கறையோடு வெளியிட்டு வரும் காலாண்டு சஞ்சிகைக்கு “கதிரவன்” என்றபெயர் பொருத்தமானதே.

இலங்கைத் தமிழ் ஈழ இலக்கியத்தைப் பொறுத்த வரையில் தமிழ் மொழி மூலம் வெளியிடப்பட்டு வரும் சிற்றிதழ்களின் எண்ணிக்கை மிகக் குறைவானவையாகவே காணப்படுகின்றன. அதிலும் நீண்ட காலம் நிலைத்திருந்து இலக்கியச் சேவை புரிந்தவரும் இதழ்கள் அதனிலும் சொற்பமானவையே. இருந்தாலும் கதிரவன் சஞ்சிகை 2008 தொடக்கம் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது ஒரு சாதனை. மகிழ்ச்சி தரும் செய்தி. அதிலும் புதுக்குடியிருப்பு போன்ற வளர்முகக் கிராமம் ஒன்றிலிருந்து ஊக்கத்தோடும் செயற்திற னோடும் இப் பத்திரிகை வெளியிடப்பட்டுக் கொண்டிருப்பது இதயத்தில் இதம் சேர்க்கு மோர் இரட்டிப்பு மகிழ்ச்சியாகும்.

அத்தோடு இச் சஞ்சிகையின் முன்னோடியாக ஆசிரியர் திரு.த.இன்பராசா மிகுந்த சிரமமெடுத்து வளர்த்து வருவதைப் பாராட்டாமல இருந்துவிட மடியாது. இவரது பணி தங்கு தடையின்றித் தொடர இறையருள் முன்நிற்பதாக. என வாழ்த்துகிறேன்.

கதிரவன் சஞ்சிகையில் இன்று ஓரிரு சிறுகதைகள், சிறுகதை, கட்டுரை, குறுநாடகம். மற்றும் பாடசாலைச் சிறுவர்களுக்கான பரீட்சை வினாப்பத்திரங்கள் என்பனவையே பெரும்பாலும் இடம் பெற்று வருகின்றன இது மாற்றுச் சஞ்சிகைகளுடன் போட்டி போட்டு தர நிர்ணயத்தினை தக்க வைத்துக்கொள்ளப் போதுமாதாக இல்லை என்பது எமது தாழ்மையான கருத்து. பத்திரிகைத் தொழில் வெறும் இலக்கியம் மட்டுசார்ந்ததல்ல. கவர்ச்சி, வியாபார எத்தனிப்பும் கலந்திருக்க வேண்டிய ஒன்றாகும்.

சமகாலச் சிந்தனை நிகழ்ச்சி நிரல்களோடு அறிவு சார்ந்த கட்டுரைகள் சிலவும் விஞ்ஞான தொழில் நுட்ப விடயதா னங்களும் சினிமா, விளையாட்டுப் பற்றிய செய்திகளும் உள்ளடக்கப்படின் தரங்கூடிய தாக வாசகர்கள் கருதக் கூடும். இந் நோக்கத் திற்காக பக்கங்களைக் கூட்டி அல்லது சில முக்கியத்துவமில்லாத ஆக்கங்களை தவிர்த்து அந்த இடப்பரப்பினில் தரம் வாய்ந்த கல்வி முன்னோடிகளின் படைப்புக்களைச் சேர்ப்பது மதி நுட்பம் வாய்ந்த செயலாற்றுகையாக அமையும் என எண்ணுகின்றேன். நவீன புதுக்கவிதை, ஹைக்கூ பாடல்கள் என்பனவற் றோடு மரபு சார்ந்த கவிதைகளும் இடம் பெறுவது முக்கியமே.


புதுக்கவிதைகளும் ஹைக்கூ கவிதைகளும் வர்ணனை இல்கியமாகிய காதல் என்ற ஓர் உணர்வினை மட்டுமே பெரும்பாலும் எடுத்தாளப் பயன்படுத்துவதால் அவற்றின் கருப்பொருள் மூல எல்லைக்கு ஓட்டினாலன்றி அதன் பொருள் புரியாத ஒரு நிலை உருவாவதாக உணர்கின்றேன். ஆயினும் பழமையை ஏற்றலும் புதுமையைப் புகுத்தலும் சமூகத்திற்கு நம் இரு கண்களாகின்றதாம். காலத்தால் வேரூன்றி கருத்துக் களமாக மிளிர்வது புதுக் கவிதைகளை விடவும் மரபுக் கவிதைகளே தமிழில் மரபுக் கவிதைகள் தோன்றாதிருந் திருந்தால் எம்மொழி செம்மொழியாக மிளிர்ந்திருப்பது எங்ஙனம்?

# கல்விக்கதிர்

## அறிந்து கொள்வோம்

செல்வி. ந.சறோஜினி
கதிரவன் பாலர் பாடசாலை

### ❑ முதலை



- மனிதனைப் போல சுவாசப்பை கொண்ட பிராணி
- கண்களைத் திறந்து வைத்துக்கொண்டே தூங்கும் பிராணி
- நாக்கில்லாத உயிரினம்
- மூக்கில் பல் உள்ள பிராணி
- நீரில் முட்டையிடாத ஈரூடகவாழி
- உணவை மென்று உண்ணாத பிராணி
- சாகும்வரை வளச்சியடையும் உயிரினம்
- ஊர்வனவற்றில் ஊனுண்ணி
- மயிர்களுக்காகவும், தோல்களுக்காகவும் வேட்டையாடப்படும் உயிரினம்
- வியர்வையைக் கண்கள் மூலம் வெளியேற்றும் பிராணி
- ஈரூடக வாழியில் முலையூட்டி
- கீழ்த்தாடையை அசைக்கத் தெரியாத பிராணி

### ❑ உங்களுக்குத் தெரியுமா ?

பே. பிரகாஷ்.

- ஒவ்வொரு ஆண்டும் **160 லட்சம் இடி, மின்னல்,** பூமியில் ஏற்படுகின்றன.
- சர்வாதிகாரி **அடல்ப் ஹிட்லர்** கைத்துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.
- நீர் குடிக்கத் தெரியாத உயிரினம் **ஓணான்.**
- பறக்கத் தெரியாத பறவை **பென்குயின்.**
- 11 நாடுகளை எல்லையாகக் கொண்ட நாடு **சீனா.**





**தென்றல்**
**தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை**

ஆசிரியர் : க.கிருபாகரன்
முகவரி : 44/1, பழைய கல்முனைவீதி, கல்லடி, மட்டக்களப்பு
தொலைபேசி : 0776983597
ஒருவருட சந்தா : 300/-
ஆயுள் சந்தா : 4000/-

## தமிழறிவு

த.யுவராசா

- **ஆசுகவி** என அழைக்கப்படும் ஈழத்துப் புலவர் - **கல்லடி சு. வேலுப்பிள்ளை.**
- **புலவர் மணி** எனப் போற்றப்படுபவர் - **அ. பெரியதம்பிப்பிள்ளை.**
- **பண்டிதமணி** எனப் போற்றப்படுபவர் - **சி. கணபதிப் பிள்ளை.**
- **தமிழ்த் தாத்தா** என அழைக்கப்படுபவர் - **உ. வே. சுவாமிநாதஐயர்.**
- **தங்கத் தாத்தா** என அழைக்கப்படுபவர் - **நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.**

## தெரிந்து கொள்ளுங்கள்.

பு. தியாதாஸ்

- உலகிலேயே மிகவும் விலையுயர்ந்த பூவைத் தரும் செடி **குங்குமப் பூச்செடிதான்.**
- தாஜ்மஹால் இருக்கும் நதிக்கரையின் முந்தைய பெயர் **அக்பராபாத்**
- வானம் பாடிப் பறவையில் **75 வகைகள்** உள்ளன
- ஆண்களுக்கான சட்டையைக் கண்டுபிடித்த நாடு **எகிப்து**
- கண்ணாடியால் சாலைகள் போட்ட முதல் நாடு **ஜேர்மனி**
- நிலக்கடலையின் பிறப்பிடம் **தென் அமெரிக்கா**
- யூதர்களின் கலண்டரில் முதல் மாதம் **செப்ரம்பர்**
- **கெய்ரோவில் உள்ள பல்கலைக் கழகம்**தான் உலகில் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்டது.
- மனித உடலில் குளிர்ச்சியான பாகம் **மூக்குநுனி**
- ஒரே ஆண்டில் 74 புலிட்சர் விருதுகளை வென்ற அமெரிக்கப் பத்திரிகை **நியூயோர்க் டைம்ஸ்.**





**கவிஞன்** காலாண்டுக் கவிதை இதழ்
ஆசிரியர் : சதாசிவம் மதன்
முகவரி : கூட்டுறவுக்கடை வீதி, புதுக்குடியிருப்பு, 30158, மட்டக்களப்பு, இலங்கை.
தொலைபேசி : 0094 77 3620328 / 0094 65 3650153
ஒருவருட சந்தா : - 300/=



**மகுடம்**
**கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்**
ஆசிரியர் : வி.மைக்கல் கொலின்
முகவரி : மகுடம், இல.90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000
தொலைபேசி : 0774338878
ஒருவருட சந்தா : 500/-, தனிப்பிரதி : 100/-
"மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகி தலைப்பது மகுடம்"

# புலமைக்கதிர்

## தரம் 05 புலமைப் பரீட்சையில் தோற்றவுள்ள மாவணர்களுக்கான மாதிரி வினாக்கள்

ஆசிரியர் :- செள.லெ.லொறன்ஸோ

## பகுதி I

**பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. இலங்கையின் சுதந்திர தினம் எப்போது ?
(A) பெப்பிரவரி 7 (B) பெப்பிரவரி 4 (C) பெப்பிரவரி 28

02. லீப் வருடம் ஒன்றில் எத்தனை நாட்கள் உள்ளன ?
(A) 365 (B) 366 (C) 367

03. உலகின் முதற் பெண் பிரதமர் யார்?
(A) சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க (B) இந்திரா காந்தி
(C) சிறிமாவோ பண்டாரநாயக்கா

04. பின்வரும் வசனத்தில் சரியான வசனம் எது ?
(A) அவன் நன்றாகப் படிப்பாள் (B) அவன் நன்றாகப் படிப்பார்கள்
(C) அவன் நன்றாகப் படிப்பான்

05. பின்வரும் சொற்களில் சரியான சொல் எது ?
(A) வாளைப்பழம் (B) வாழப்பழம் (C) வாழைப்பழம்

06. தளபாடம் என்ற சொல்லின் பன்மை ?
(A) தளபாடம் (B) தளபாடங்கள் (C) தளபாடம்கள்

07. **வெற்றிடம்** என்பதைப் பிரித்து எழுதினால் ?
(A) வெற்றி +இடம் (B) வெற்று + இடம் (C) வெறுமை + இடம்

08. ஆமணக்கின் உள்ளீடு முத்து என்பதுபோல் நெல்லின் உள்ளீடு ?
(A) கதிர் (B) மணி (C) அரிசி

09. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் ?
(A) புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை (B) C.W.W கன்னங்கரா
(C) ஆனந்த சமரக்கோன்

10. 13, 17, 21, 25, . . . . எனும் தொடரில் அடுத்து வரும் இலக்கம் ?
(A) 29 (B) 26 (C) 28

11. கள், காடு, கிட்டி, கீரை . . . . அடுத்துவரவேண்டிய சொல் ?
(A) கூரை (B) குதிரை (C) கொட்டில்

பின்வரும் பாடலை வாசித்து விடை தருக.

**கறுப்பு வண்ணக் காக்கையரே**
**கண்ணை உருட்டிக் கரைகிறாய்**
**விருந்திற் கலந்து கொள்ளவா**
**விரைந்து உறவை அழைக்கிறாய்**

12. **'கண்ணை'** என்பதன் ஒத்தகருத்துச் சொல்
(A) என்னை (B) மண்ணை (C) விழியை

13. **'விரைவு'** என்பதன் எதிர்க் கருத்துச் சொல்
(A) தாமதம் (B) வேகம் (C) வெட்கம்

14. பாடலில் கூறப்பட்டுள்ள காக்கையின் நல்ல இயல்பு
(A) கண்ணை உருட்டுதல் (B) கரைதல் (C) பகிர்ந்துண்ணல்

15. **வைத்தியர் - நோயாளி** என்பது போல்
(A) மிருகக்காட்சிசாலை-சிங்கம் (B) பழம்-மாம்பழம் (C) ஆசிரியர்-மாணவர்

16. **பசுமை + சோலை** எப்பதைச் சேர்த்தெழுதினால்
(A) பச்சோலை (B) பசுமோலை (C) பசுஞ்சோலை

17. **'பறவை'** என்பதன் ஒத்த பொருட் சொல் அல்லாதது
(A) பட்சி (B) பம்பரம் (C) புள்

- **18-20 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் குறியீடுகளைக் கொண்டு விடை தருக**

(A) விளையாட்டுப் போட்டி (D) மாவட்ட மட்டம்
(B) கலந்து கொண்டனர். (E) மாகாண மட்டம்
(C) மாணவர்கள் (F) சிறுவர்கள்

18. **'மாணவர்கள் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர்'** என்பதைக் குறிக்கும் சரியான சொல்
(A) FBAE (B) ADCB (C) CDAB

19. **'சிறுவர்கள் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர்'** என்பதன் சரியான வடிவம்
(A) FEAB (B) FDAB (C) FEBA

20. FCEAB என்பதால் குறிப்பிடப்படும் மிகச் சரியான வசனம்
A சிறுவர்கள் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர்
B சிறுவர்களும் மாணவர்களும்மாவட்டமட்ட விளையாட்டுப்போட்டியில்கலந்துகொண்டனர்
C சிறுவர்களும்மாணவர்களும்மாகாணமட்ட விளையாட்டுப்போட்டியில்கலந்துகொண்டனர

21. கிழக்கு மாகாணத்தில் அமைந்திராத மாவட்டம்
(A) மட்டக்களப்பு (B) பொலநறுவை (C) திருகோணமலை

22. 2+3+5+1+4 = . . . . (A) 14 (B) 15 (C) 16

23. 60-7-8-5 = . . . . . (A) 40 (B) 43 (C) 45

- **24, 25ம் வினாக்களுக்க இடைவெளிக்குப் பொருத்தமான சொற் கூட்டத்தை தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.**

24. அந்த மாணவன் நன்றாக . . . . .காரணமாக பரீட்சையில் . . . . . அடைந்தான்
(A) சித்தி-தோல்வி (B) விளையாடியதன்-மகிழ்ச்சி (C) படித்ததன்-சித்தி

25. பெரியோரை . . . . சிறுவரது . . . . . ஆகும்
(A) மதிப்பது-கடமை (B) மதிப்பது-மகிழ்ச்சி (C) ஏசுவது-கடமை

26. போமலீன் இட்ட மீனை உண்பதால் ஏற்படும் விளைவு
(A) உதடுகள் வீங்குதல் (B) முளைக்காய்ச்சல் (C) நித்திரையாதல்

27. டெங்கு நோயைப் பரப்புவது
(A) சுத்ததமான தண்ணீர் (B) யானைக்கால் (C) நுளம்பு

28. நெருப்புக் காய்ச்சல் பரவுவது
(A) நெருப்பினால் (B) நீரினால் (C) நுளம்பினால்

29. பொருத்தமற்ற சோடியைத் தெரிவு செய்க
(A) வெண்டி-கத்தரி (B) டெங்கு-யானைக்கால் (C) யானை-நுளம்பு

30. தீதாளைப் பயன்படுத்துபவர்
(A) தச்சர் (B) தையல்வேலை செய்வோர் (C) வைத்தியர்

31. 'BRINJAL' என்பதன் தமிழ் வடிவம்
(A) வெண்டி (B) கத்தரிக்கோல் (C) கத்தரி

32. மழைவீழ்ச்சியை அளக்கப் பயன்படும் கருவி
(A) mm (B) cm (C) ml

# கதிரவன் புலமைத்தேர்வு - 10

**முடிவுத் திகதி 25.07.2012**

பெயர் :- ..............................................................................

முகவரி :- ..............................................................................

..............................................................................

பாடசாலையின் பெயர் :- ..............................................................

..............................................................................

இப்பகுதியை வெட்டி விடைகளை எழுதி, கடித உறைக்குள் வைத்து அனுப்பவும் (ஆ-ர்)

33. அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகம்
(A) கங்காரு (B) ஆண்மயில் (C) மரை

34. வீதியொன்றில் பாதசாரிகள் செல்ல வேண்டிய பாகம்
(A) வலது பக்கம் (B) இடது பக்கம் (C) வீதியின் மருங்கு

35. இலங்கையை இறுதியாக ஆண்ட வெளிநாட்டவர் யார்?
(A) போர்த்துக்கேயர் (B) ஒல்லாந்தர் (C) ஆங்கிலேயர்

36. $2x3+2=$ .... (A) 8 (B) 7 (C) 12

37. அடம்பன் கொடியும்
(A) திறண்டால் மிடுக்கு (B) திரன்டால் மிடுக்கு (C) திரண்டால் மிடுக்கு

38. சோறு என்பதற்கான சிங்களச் சொல்
(A) கிரி (B) பத் (C) நங்கி

39. பின்வருவனவற்றுள் இசைக்கருவி அல்லாதது
(A) வீணை (B) தம்புரா (C) குந்துகாலி

40. இலங்கைக்கு மட்டும் உரித்தான முலையூட்டி
(A) பேய்ஓணான் (B) பச்சைப்பாம்பு (C) அழுங்கு

## கதிரவன் புலமைத்தேர்வு - 09 வெற்றிபெற்றோர்.

**கி.உ தேசன், அ.கிருஷ்னிகன், செ.குபேநிதா**

## புலமைக்கதிர்

**விடைகளை எழுதி அனுப்புங்கள்**

**(முதல் மூன்று வெற்றியாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | ................ | 11 | ................ | 21 | ................ | 31 | ................ |
| 02 | ................ | 12 | ................ | 22 | ................ | 32 | ................ |
| 03 | ................ | 13 | ................ | 23 | ................ | 33 | ................ |
| 04 | ................ | 14 | ................ | 24 | ................ | 34 | ................ |
| 05 | ................ | 15 | ................ | 25 | ................ | 35 | ................ |
| 06 | ................ | 16 | ................ | 26 | ................ | 36 | ................ |
| 07 | ................ | 17 | ................ | 27 | ................ | 37 | ................ |
| 08 | ................ | 18 | ................ | 28 | ................ | 38 | ................ |
| 09 | ................ | 19 | ................ | 29 | ................ | 39 | ................ |
| 10 | ................ | 20 | ................ | 30 | ................ | 40 | ................ |

**முகவரி**
ஆசிரியர்
கதிரவன்
புலமைக்கதிர் - 10
புதுக்குடியிருப்பு - EP



# விஷ்வப்பிரம்மா பொன் அகம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து
கொடுப்பதுடன் பழைய தங்கம் வெள்ளி
நியாயமான விலையில் வாங்கப்படும்.

உரிமையாளர் - மூர்த்தி
தட்டார் தெரு
தாழங்குடா - 03
தொ.பே - 0776529929

---

கதிரவன் கதிர் 11 சிறப்படைய வாழ்த்துக்கள்



# சிகா பேக்கரி

பிரதான வீதி, புதுக்குடியிருப்பு



உரிமையாளர்:- சி.கிருஸ்ணாகரன்
0757286061

# சிவா மல்டி கொம்லெக்ஸ்

மட்/ புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக

பயிற்சிப் புத்தகங்கள், புலமைப்பரிசில் மாணவர்களுக்கான புதிய வெளியீடுகள், பாடசாலை உபகரணங்கள், பரிசுப் பொருட்கள், வாழ்த்தட்டைகள், தெளிவான போட்டோபிரதி, பெக்ஸ், ஸ்கேனிங், லெமினேட்டிங், கொம்பியூட்டர் பிரிண்டிங், Book வைண்டிங், E-mail & Internet CD & DVDMobitel, Dialog, Airtel, Reload.



பிரதான வீதி, புதுக்குடியிருப்பு.
தொ.பே : 065-3641247 / 077-0452861
உரிமையாளர் :- P.சிவனேசராஜா





# NTP FIVE STAR HOTEL (pvt) Ltd

## Tourist Guest House & Restaurant









*Main Street,*
*Puthukkudiyiruppu - South.*
*Tel: 0652051076 / 0652051044 / 0776231577 / 0770548198*

கதிரவன் சஞ்சிகைக்கு தகுதியான ஆக்கங்கள் மற்றும் விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
0754265201. 0776968250

வணசிங்க பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே: 0652227170